PUBLIC LIBRARY
JAFFNA

AHARAM அகரம்

தரம் 5 - 11 வரை | எண்: 09 எழுத்து: 04 ஏப்ரல் - 2015 | www.aharam.lk

மாணவர்கள் ஏன் தோற்றுப் போகிறார்கள்?

எல்லா நோய்களுக்கும் நிவாரணி

கருஞ்சீரகம்

Des: Deltota Harees

மாதாந்த சிறுவர் சஞ்சிகை 50/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கு நோக்கிய பயணம் ஓய்வின்றி அமைய...

சாதாரண காரியங்களுக்காகவே நீ படைக்கப்பட்டிருக்கிறாய் என நம்பும் போது வாழ்க்கையில் எதையும் சாதிக்க முடியாது. அதேநேரம், பெரும் சாதனைகளுக்காக நீ படைக்கப்பட்டவன் என்ற நம்பிக்கை உன்னிடம் இருந்தால் தடைகளையும் எல்லைகளையும் கடந்து பெரிதாக சாதிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்படும். குறுகிய வட்டத்திலிருந்து வெளியேறி பரந்த எல்லைகளையும் உயர்ந்த குறிக்கோளையும் நோக்கி நீ புறப்படுவாய்.

ஓர் உதாரணத்தின் மூலம் இதை நீ புரிந்து கொள்ளலாம். 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்பவன் பந்தய தூரத்தைக் கடந்ததும் களைப்படைந்து விடுவான். 400 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்பவன் 100 மீற்றர் அல்லது 200 மீற்றர் தூரத்தைக் கடக்கும்போது களைப்பை உணர மாட்டான். வாழ்க்கையில் எது உனக்கு வலிமையைத் தரும்? எனவே, உனது இலக்கை வகுத்துக் கொள். அது மேடு, பள்ளங்கள் நிறைந்த உயரிய கடினமான இலக்காக இருக் கட்டும். அதை நோக்கி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புதிய அடியை வை. அவ்வாறு செய்தால் உனது இலக்கை எளிதில் அடைந்துவிடலாம்.

தன்னம்பிக்கை ஓர் உயர்ந்த பண்பு. வாழ்க்கையின் வெற்றித் தூண்கள் அதன் மீதே எழுப்பப்படுகின்றன. தன்னம்பிக்கைக்கும் அசட்டுத் தைரியத்திற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. அசட்டுத் தைரியம் கற்பனையும் இறுமாப்பையும் சார்ந்தது. தன்னம்பிக்கை உண்மையான ஆற்றலை அடிப்படையாகக் கொண்டது. பொறுப்புகளை நிறைவேற்றுவது, தகுதிகளையும் திறமைகளையும் ஆக்கபூர்வமாக வளர்த்துக் கொள்வது ஆகியவை தன்னம்பிக்கையின் அடையாளங்கள்.

கவலைப்படாதே எனும் நூலிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AHARAM அகரம்

எண்: 09, ஏப்ரல்: 2015, எழுத்து: 04



உள்ளே...


கற்றலில் ஏற்படும் இடையூறுகள் 19


மாணவர்கள் ஏன் தோற்றுப் போகிறார்கள்? 35


எல்லா நோய்களுக்கும் நிவாரணி கருஞ்சீரகம் 04


உன்னாலும் முடியும் முன்னேறு 36

11

38

07

பாடத்திட்டம்

புலமைப்பரிசில்	39	வரலாறு	16
கணிதம்	23	விஞ்ஞானம்	30

பிரதம ஆசிரியர்
டாக்டர் ஆகில் அஹ்மட் ஷரிபுத்தீன்

ஆலோசனைக் குழு
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

பொறுப்பாசிரியர்
ஜே.எம். அஸீம் (நளீமி)

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்

சந்தா விபரம்

தனிப்பிரதி	50/-
1 வருட சந்தா	800/-
6 மாத சந்தா	400/-

தொடர்புகளுக்கு:
அகரம்
77, தெமட்டகொட வீதி
கொழும்பு 09
தொ.பே : 076 670 4787
பெக்ஸ் : 011 268 6030
www.aharam.lk
E.mail: editor@aharam.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசு இரிதல்

நேரத்தை வரையறை செய்வோம்

நேரம் அனைவருக்கும் பொதுவாகத்தான் அமைகிறது. நேரம் செல்லும் வேகமும் அனைவருக்கும் பொதுவானதுதான். ஆனால், நாம் செய்யும் வேலையின் வேகம் மாறுபடும். அனைவரும் ஒரே வேகத்தில்தான் வேலை செய்வார்கள் என்றில்லை. காலம் ஒன்றானாலும் செய்யும் வேகத்திற்கேற்ப வேலை செய்யும் நேரம் வீணாவதும், நேரம் உச்ச அளவில் பயன்படுத்தப்படுவதும் உண்டு. ஒரு விடயத்தை வினைத்திறனாக செய்ய அந்த விடயத்தில் அறிவும் அனுபவமும் அவசியமாகின்றன. இல்லாவிட்டால் நேர விரயம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிறது. உதாரணமாக, ஒரு தச்சன் மர வேலை செய்வதற்கும் அத்துறையில் அனுபவமில்லாதவர் பலகையை அறுப்பதற்கும் இடையில் எத்தனை வேறுபாடுகள்.

நேரத்தை யாருக்குக் கட்டுப்படுத்த முடியும்? அது அதன் பாட்டில் பயணித்துக் கொண்டுதான் இருக்கும். அதனோடு சேர்ந்து நாம் பயணிக்க வேண்டுமே தவிர, நாம் ஓய்வெடுத்ததற்காக நேரம் ஓய்வெடுக்காது. எனவே, எமது செயற்பாடுகளில், எமது வாழ்க்கையில் நேரம் எப்படிப் பாதிப்பு செலுத்தும் என்பதை அறிந்து அதற்கேற்றாற்போல் செயற்படுவதைத் தவிர, வேறு வழியில்லை.

எந்த ஒன்றுக்கும் நேர வரையறை இருக்கிறது. அந்த நேர வரையறையை அறிந்து பணியாற்ற வேண்டியது வெற்றிக்கு அவசியமாகும். நேர வரையறை தாண்டிப் பயணிப்பதால் காலதாமதம் ஏற்படும். காலதாமதத்தால் பல இழப்புகள் ஏற்படும். நேர வரையறை என்ற பழக்கத்தை உங்களிடம் நீங்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு வேலையையும் செய்ய எவ்வளவு நேரம் தேவை என்பதை வரையறுத்து, உரிய நேரத்திற்குள் அவ்வேலையை சிறப்பாக முடிப்பதற்கு நீங்கள் பழக்கிக் கொள்ள வேண்டும். எமது பணிகளில் பெரும்பாலானவை காலத்தால் வரையறுக்கப்பட்டே இருக்கின்றன. இவ் விடயம் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்படாததால் வாழ்க்கையில் நேரத்தை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு தவறி விடுகின்றனர்.

இப்போது வேகத்திற்கும் நேரத்திற்கும் இடையில் உள்ள தொடர்பை நீங்கள் அறிந்திருப்பீர்கள். வேகம் அதிகரிக்க அதிகரிக்க நேரம் குறைவடையும். 40 கி.மீ. வேகத்தில் செல்லும் வாகனம், குறிப்பிட்ட தூரத்தைக் கடக்க எடுக்கும் நேரத்தை விடக் குறைந்த நேரத்தில் 50 கி.மீ. வேகத்தில் செல்லும் வாகனம் அத்தூரத்தை கடந்துவிடும். அதுபோலவே நாம் செய்கின்ற பெரும்பாலான வேலைகள் வேகத்துடனும் நேரத்துடனும் தொடர்பு படுகின்றன. ஒரு பக்கத்தை வாசிக்கும் வேகம், ஒரு பக்கம் எழுத எடுக்கும் நேரம், ஒரு வினாவுக்கு விடையளிக்க வழங்கப்படுகின்ற நேரம், 250 சொற்கள் கொண்ட கட்டுரை ஒன்று வரைய தரப்படுகின்ற நேரம், பாடசாலை நேரசூசியில் ஒரு பாடத்திற்கு வரையறுக்கப்பட்டுள்ள நேரம், பாடசாலை நடைபெற வேண்டிய காலம் அனைத்துமே நேரத்தால் வரையறுக்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பிட்ட நேரத்திற்குள் குறிப்பிட்ட வேலையை செய்ய நாம் எம்மைப் பயிற்றுவித்துக் கொள்ள வேண்டும். இவ்வளவு நேரம் என வரையறுத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக, தூங்குவதற்கு ஏழு மணித்தியாலங்கள். மற்றும் சில வேலைகளுக்கு எவ்வளவு நேரம் எடுக்கும் என்பதை நீங்கள் கண்டறிய வேண்டும். உதாரணமாக, ஒரு பக்கத்தை வாசிப்பதற்கு எடுக்கும் நேரம். இவ்விரண்டு வகையிலும் நீங்கள் உங்கள் நேரத்தை வரையறுத்துக் கொள்ள வேண்டும்.

விழித்திருப்பதற்கு மாத்திரமல்ல, தூங்குவதற்கான நேரம் எவ்வளவு, ஓய்வாக இருப்பதற்கான நேரம் எவ்வளவு என்றும் வரையறுத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், உங்கள் தாமதம் மற்றவர்களின் வேலைகளைப் பாதிக்கலாம். எனவே, நேரத்தை வரையறை செய்து வாழ்வை மேம்படுத்தி வெற்றி பெற வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

அல்லாஹுத் தஆலா கூறுவதாக அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூஹுறைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள். "என் அடியான் மேலதிக வணக்க வழிபாடுகள் மூலம் நான் அவனை நேசிக்கும் வரை அவன் என்னை நெருங்கிக் கொண்டிருப்பான். நான் அவனை நேசித்துவிட்டால் அவன் செவிமடுக்கின்ற செவிப் புலனாக, பார்க்கின்ற பார்வையாக, பிடிக்கின்ற கரமாக, நடக்கின்ற காலாக நான் இருப்பேன். அவன் என்னிடம் (உதவி) கேட்டால் அவனுக்கு நான் கொடுப்பேன். அவன் என்னிடம் பாதுகாப்புக் கேட்டால் நிச்சயம் அவனுக்கு பாதுகாப்புக் கொடுப்பேன்." (புஹாரி)

மனித வாழ்வில் இறைத் தொடர்பு இன்றியமையாத ஒன்றாகும். இது மனிதன் இம்மையிலும் மறுமையிலும் வெற்றி பெற வழியேற்படுத்துகின்றது. மனிதன் அல்லாஹ்வுடன் ஏற்படுத்தியிருக்க வேண்டிய தொடர்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்ற நீண்ட தொரு ஹதீஸ் குத்ஸியின் ஒரு பகுதியே இங்கு நாம் விளக்கத்திற்கு எடுத்துள்ளோம்.

அல்லாஹ்வை ஈமான் கொண்டு இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மனிதன் அவனை சதாவும் நினைவுகூர்வதுடன் அவனிடமே தனது அனைத்து காரியங்களையும் ஒப்படைத்து தனது ரப்புடனான உறவை மிகவும் பலப்படுத்தி வாழ்வான்.

தனது கஷ்டத்தின்போதும், சந்தோஷத்தின்போதும் அவன் தன் ரப்போடு இருக்கின்ற உறவையும் அவன் மீதுள்ள நம்பிக்கையையும் சற்றும் விட்டுக் கொடுக்க மாட்டான். இந்த வகையில் உலகில் வாழ்ந்த அனைத்து தூதர்கள், நபிமார்கள், ஸஹாபாக்களும் இறைத் தொடர்பினை எச்சந்தர்ப்பத்திலும் மிகவும் இறுக்கமாக பாதுகாத்து வந்தனர்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் தன் ரப்போடு அதிகம் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் இராப் பொழுதுகளில் கால்கள் வீங்குகின்ற அளவுக்கு நின்று வணங்குபவர்களாக இருந்தார்கள். ''அல்லாஹ்வின் தூதரே! ஏன் இவ்வாறு தொழுகிறீர்கள்? உங்களது முன் பின் பாவங்களை அல்லாஹ் மன்னித்து விட்டானே என ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் கேட்ட வேளையில், அல்லாஹ்வுக்கு நன்றியுள்ள அடியானாக இருக்க வேண்டாமா? என நபியவர்கள் பதிலளித்தார்கள்.'' (புஹாரி, முஸ்லிம்)

அன்னை ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களுக்கு அவதூறு சொல்லப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர்களை அனைவரும் வெறுத்தொதுக்கினர். அச்சந்தர்ப்பத்திலும் அவர்கள் ரப்போடு இருந்த தொடர்பை துண்டித்துக் கொள்ளவில்லை. இதனால் அல்லாஹ் அவர்களுடைய விடயம் தொடர்பாக அவர் எக்குற்றமும் புரியாதவர் என அல்குர்ஆன் வசனத்தையே இறக்கியருளினான்.

இப்படி, எச்சந்தர்ப்பத்திலும் அல்லாஹ்வை மனதில் இருத்தி அவனுடனான தொடர்பை பலப்படுத்தும்போது அல்லாஹ்வின் உதவியை கண் முன்னால் கண்டு கொள்ளலாம் என்பதை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு பின்வருமாறு செய்த உபதேசத்தின் மூலம் அறிய முடிகின்றது.

''சிறுவனே! நீ அல்லாஹ்வை உன் மனதில் இருத்திக் கொள்வாயாக. அல்லாஹ் உம்மைப் பாதுகாப்பான். நீ அல்லாஹ்வை மனதில் இருத்திக் கொள்வாயாக. உமக்குத் தேவையான சந்தர்ப்பத்தில் அவனை நீ கண்டு கொள்வாய். நீ எதனையும் கேட்க விரும்பினால் அல்லாஹ்விடத்தில் கேள். நீ உதவி தேட விரும்பினால் அல்லாஹ்விடம் உதவி தேடு.'' (திர்மிதி)

தன் ரப்போடு இறுக்கமான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முயலும் ஒருவன், தனது செயல்களை தனது ரப்பின் திருப்தி எனும் தராசில் வைத்து நிறுத்துப் பார்ப்பான். அல்லாஹ்வின் திருப்தியின் தட்டு கனமானால் அதை ஏற்று திருப்தியடைகிறான். இப்படியே அவன் நேர்வழியின் அளவுகோல்களை நிர்ணயித்துக் கொள்கின்றான்.

மேற்படி ஹதீஸுல் குத்ஸியில் ரப்போடு இறுக்கமான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கான இரண்டு வழிகள் காட்டப்பட்டுள்ளன. முதலாவது, பர்ளான கடமைகளை நிறைவேற்றுவது. மற்றையது, மேலதிக வணக்கங்களில் ஈடுபாடு காட்டுவது.

ரப்போடு தொடர்பை ஏற்படுத்தக் கூடிய மேலதிக வணக்கங்களாக பின்வருபவை காணப்படுகின்றன:

- நபிலான தொழுகைகளை நிறைவேற்றல்
- அல்குர்ஆனை அதிகமதிகம் ஓதுதல்
- அல்லாஹ்வை திக்ரு செய்தல்
- சந்தர்ப்ப துஆக்களை ஓதுதல்
- காலை மாலை துஆக்களை ஓதுதல்
- அதிகம் இஸ்திஃபார் செய்தல்
- நல்ல வார்த்தைகளைப் பேசுதல்
- மற்றவர்களோடு நல்ல முறையில் நடத்தல்

மாணவர்களாகிய நாமும் இத்தகைய வணக்கங்களினூடாக அல்லாஹ்வுடனுள்ள தொடர்பை உயிர்த் துடிப்புள்ளதாக ஆக்கிக் கொள்வதன் மூலம் அவனுடைய பாரிய உதவிகளை எம் கண் முன்னே கண்டு கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எல்லா நோய்களுக்கும் நிவாரணி

கருஞ்சீரகம்

பாரம்பரிய மருத்துவ முறைகளில் பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு முக்கியமான விதைதான் கருஞ்சீரக விதை. ஆயுர்வேத, யூனானி மற்றும் இன்றைய நவீன மருந்து வகைகளிலும் கருஞ்சீரகம் கலவையாகப் பயன்படுத்தப்படுகின்றது. அவ்வளவு சிறப்பும் மருத்துவக் குணமும் கொண்டதுதான் கருஞ்சீரகம். ஆங்கிலத்தில் Nigella sativa அல்லது Black seed என அழைக்கப்படும் கருஞ்சீரகத்தின் தாயகம் தென் ஐரோப்பிய, தெற்கு மற்றும் தென் மேற்கு ஆசியாப் பகுதிகளாகும். இந்தியத் துணைக் கண்டத்தின் சில மாநிலங்களிலும் இவை காட்டுச் செடியாக வளர்கின்றன.

கருஞ்சீரகம் பழங்காலம் முதல் வாசனைத் திரவியமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மிகப் பழைமையான ஹீப்ரு மொழியில் கருஞ்சீரகம் பற்றிய விளக்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பிளின் என்ற புகழ் பெற்ற பழங்கால மருத்துவ நிபுணர் தனது நூலில் கருஞ்சீரகத்தைப் பற்றியும் அதன் மருத்துவக் குணங்கள் பற்றியும் விளக்கிக் கூறியுள்ளார். சுமார் 3,300 வருடங்களுக்கு முன்பிருந்தே இந்த விதை எகிப்திய மக்களால் பயிரிடப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன.

கருஞ்சீரகம் செடி வகையைச் சேர்ந்ததாகும். அழகான தோற்றத்தில் சுமார் 20 முதல் 30 செ.மீ. உயரம் வரை வளரக் கூடியது. அதன் மலர்கள் கூட நீண்ட காம்புகளுடன் வெளிர் நீல நிறத்திலும் வெள்ளை நிறத்திலும் இருக்கும். மலரின் இதழ்கள் ஐந்து முதல் பத்து வரை வெவ்வேறாகப் பிரிந்து காணப்படும். மலரிலிருந்து உருவாகும் காயின் மேற்பகுதி காய்ந்து பிளவுற்று விதைகள் வெளியாகும். ஒரு காயில் பல விதைகள் அடங்கியிருக்கும். இவை கறுப்பு நிறத்திலும் சற்று கடினமானதாக இருக்கும்.

கருஞ்சீரகத்தின் மிகப் பிரதான அம்சமே அதிலுள்ள மருத்துவக் குணம்தான். இது தொடர்பாக நபி முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறிய ஒரு பிரபலமான ஹதீஸை இங்கு நோக்குவோம்.

''கருஞ்சீரகத்தில் மரணத்தைத் தவிர அனைத்து நோய்களுக்கும் நிவாரணம் உள்ளது'' அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) (நூல்கள்: புகாரி, 5688. முஸ்லிம், 4451. திர்மிதி, இப்னுமாஜா)

உடலுக்கு அவசியமான அமினோ அமிலங்கள், கொழுப்பு அமிலங்கள், விற்றமின், கரோடின், கல்சியம், இரும்புச் சத்து, பொட்டாசியம் எனப் பல சத்துக்களை இது கொண்டுள்ளது. மனித உடலில் தோன்றும் சுமார் 40 வகையான நோய்களுக்கு இதில் நிவாரணம் இருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்தைத் தவிர மற்ற அனைத்து நோய்களுக்கும் நிவாரணம் உள்ளது என்று கூறுமளவு இதில் அவ்வளவு மருத்துவக் குணங்களும் பயன்களும் இருக்கின்றன. இதனால்தான் இன்றும் பொதுவாக அனைத்து வீடுகளிலும் கருஞ்சீரகம் கண்டிப்பாக வைத்திருப்பார்கள். அவசர சிகிச்சைக்கு அருமருந்தாக, நோய் நிவாரணியாக கருஞ்சீரகத்தை உபயோகப்படுத்துவார்கள். சஊதி போன்ற அரபு நாடுகளில் உணவுடன் கருஞ்சீரக விதை, கருஞ்சீரக எண்ணெய் என்பன சேர்த்துக் கொள்வது வழக்கமான ஒரு விடயம். அதனால்தான் அரபு மக்கள் இதனை ஹப்பதுல் பரகாஹ் அருள்பாலிக்கப்பட்ட விதை என அழைக்கின்றனர்.

இவ்விதைகளின் மருத்துவக் குணங்கள் தொடர்பாக உயிரியல் மருத்துவ ரீதியாக (Bio medical) பல ஆய்வுகள் செய்யப்பட்டு அவை நிரூபிக்கப்பட்டு அது பற்றிய 450 இற்கும் அதிகமான ஆய்வுக் கட்டுரைகளும் வெளியிடப்பட்டுள்ளன. இவ்விதையில் அடங்கியுள்ள தைமோ குவினோன் வேறு எந்த தாவரத்திலும் இல்லாத ஒன்று. அத்தோடு உடலுக்கு அவசியமான அமினோ அமிலங்கள், கொழுப்பு அமிலங்கள், விற்றமின், கரோட்டின், கல்சியம், இரும்புச் சத்து, பொட்டாசியம் எனப் பல சத்துக்களை இது கொண்டுள்ளது. மனித உடலில் தோன்றும் சுமார் 40 வகையான நோய்களுக்கு இதில் நிவாரணம் இருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. அவை பற்றி மேலோட்டமாகப் பார்ப்போம்.



இன்று நாம் உட்கொள்ளும் உணவு, பானங்களிலும் சுவாசிக்கும்போதும் பல்வேறு நச்சுத்தன்மை வாய்ந்த இரசாயனங்கள் உடலுக்குள் சென்று விஷமாக மாறி பல்வேறு நோய்களை உண்டாக்குகின்றன. கருஞ்சீரகத்தில் உள்ள MRSA (methicillin resistant Staphylococcus aurous) எனப்படும் ஒரு வகைப் பொருள் அவ்வாறான இரசாயனத் தாக்கங்களிலிருந்து மனிதனைக் குணப்படுத்துகின்றன.

குளிர்ச்சியால் ஏற்படும் நோய்களுக்கு (உதாரணமாக: சளியுடன் சம்பந்தப்பட்ட சகலவிதமான நோய்களுக்கும்) கருஞ்சீரகம் அருமருந்தாகக் காணப்படுகின்றது. உதாரணத்திற்கு: பீனிசம் என்று வழக்கத்தில் அழைக்கப்படும் நோயின் அறிகுறியான தும்மல், மூக்கில் இருந்து நீர் வடிதல், தலைவலி, முன் நெற்றிப் பகுதி பாரம் போன்ற நோய்களுக்கு கருஞ்சீரக எண்ணெயில் 3 அல்லது 5 துளி ஒரு மூக்குத் துவாரத்தினூடாக காலையில் எழுந்தவுடனும் இரவு படுக்கைக்குச் செல்லும்போதும் இட்டு வருவதுடன் நெற்றிப் பகுதியிலும், உச்சந் தலையிலும் கருஞ்சீரக எண்ணெய்யினைத் தொடர்ந்து இட்டு அல்லது தேய்த்து வந்தால் அல்லாஹ்வின் நாட்டத்துடன் 2-3 கிழமைகளில் சளியுடன் தொடர்பான சகல நோய்களும் குணமடைய வாய்ப்புண்டு.

PUBLIC LIBRARY
JAFFNA

இதோடு தொடர்பான பின்வரும் சம்பவத்தை படித்துப் பாருங்கள். காலித் பின் ஸஅத் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறியதாவது: எங்களுடன் ஃகாலிப் பின் அப்ஜர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் இருக்க நாங்கள் (பயணம்) புறப்பட்டோம். வழியில் ஃகாலிப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் நோய்வாய்ப்பட்டார்கள். அவர்கள் நோயாளியாக இருக்கும் நிலையிலேயே மதீனாவுக்குச் சென்றோம். ஃகாலிப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை இப்னு அபீ அ(த்)தீக் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் உடல் நலம் விசாரிக்க வந்தார்கள்.

அப்போது அவர்கள் எங்களிடம் (பின்வருமாறு) கூறினார்கள்: இந்தச் சின்னஞ்சிறு கறுப்பு வித்தை (கருஞ்சீரகத்தை) நீங்கள் பயன்படுத்துங்கள். இதிலிருந்து ஐந்து அல்லது ஆறு வித்துக்களை எடுத்துத் தூளாக்கி (எண்ணெய் பிழிந்து) அவருடைய மூக்கில் இந்தப் பக்கத்திலும் அந்தப் பக்கத்திலும் (அதன்) எண்ணெய்ச் சொட்டுகளை விடுங்கள். ஏனெனில், ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் என்னிடம், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இந்தக் கருஞ்சீரகம் எல்லா நோய்க்கும் நிவாரணமாகும், சாமைத் தவிர என்று கூறியதை நான் கேட்டிருக்கிறேன் எனத் தெரிவித்தார்கள். நான், சாம் என்றால் என்ன? என்று அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் மரணம் என்று பதிலளித்தார்கள். (புகாரி: 5687)

இதுவல்லாத இன்னும் பல்வேறு நோய்களுக்கு நிவாரணமாக கருஞ்சீரகத்தை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது தொடர்பாகGreenmedinfo என்ற இணையதளத்தில் உள்ள சில தகவல்களை இங்கே தொகுத்துத் தமிழில் தருகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ கருஞ்சீரகத்தை வறுத்துத் தூளாக்கி எண்ணெய் யில் ஊற வைத்துப் பிறகு மூக்கில் சொட்டுகள் விட்டால் கடுமையான ஜலதோஷம் நீங்கும்.

❖ சளியால் ஏற்படும் கபம், குளிர் காய்ச்சல், குறட்டை, மூக்கடைப்பு ஆகியவற்றுக்குக் கருஞ்சீரகம் நிவா ரணியாகும்.

❖ கருஞ்சீரகத்தைத் தூளாக்கி தேனில் கலந்து வெந் நீருடன் சாப்பிட்டால் சிறுநீர்க் கல்லைக் கரைத்து சிறுநீர் அடைப்பை அகற்றும். மாதவிடாய்ப் போக்கையும் சீராக்கும்.

❖ கருஞ்சீரகப் பொடியை ஒரு துண்டுத் துணியில் கட்டி உறிஞ்சி வந்தால் தடிமனுக்கு நல்லது.

❖ 5 கிராம் கருஞ்சீரகத்தைத் தண்ணீருடன் கலந்து சாப்பிட்டால் சுவாசக் கோளாறு சீரடையும்.

❖ கருஞ்சீரகத்தைக் காடி (vinegar) வினாகிரியுடன் வேக வைத்து வாய் கொப்பளித்தால் பல் வலி நின்றுபோகும்.

❖ கரும்பித்தம் மற்றும் கபத்தால் ஏற்படும் அஜீ ரணக் கோளாறை அகற்றுவதும் கருஞ்சீரகத்தின் தனிச் சிறப்பாகும்.

❖ வெள்ளைப்பூண்டின் சாறுடன் கருஞ்சீரகத்தைக் கலந்து சாப்பிட்டால் உடலிலிருந்து நுண் கிருமி கள் வெளியேறிவிடும்.

❖ கருஞ்சீரகத்தை வறுத்துத் தூளாக்கி மெழுகு மற் றும் அல்லி எண்ணெய்யுடன் கலந்து தலையில் தேய்த்தால் தலைமுடி உதிர்வதைத் தவிர்க்கலாம்.

❖ கருஞ்சீரக எண்ணெய் பக்கவாத நோய்க்கு சிறந்த மருந்தாகும்.

❖ நாய்க்கடி, பிரசவ இரத்தப் போக்குத் தடங்கல், கர்ப்பப்பை வலி, சிரங்கு, கண்வலி போன்ற நோய்களுக்கும் கருஞ்சீரகம் நல்ல நிவாரணியா கும்.

❖ தோல் நோய்களைக் குறைக்கும். பசியைத் தூண் டும். ஜீரணத்தை சீர்படுத்தும். வயிற்றுப் போக்கை குணப்படுத்தும். புழுக்கொல்லியாக செயற்படும். வாந்தியைத் தடுக்கும். இதய வலியை குறைக் கும். சிறுநீர் சுரப்பிகளை தூண்டும்.

❖ பாலூட்டும் தாய்மார் கருஞ்சீரகம் உண்பதால் பால் சுரப்பைக் கூட்டும்.

❖ சிறிதளவு கருஞ்சீரகத்தை பசும்பால் விட்டு அரைத்து முகத்தில் பூசி ஊறிய பின் கழுவி வர முகப்பரு மறையும்.

❖ கருஞ்சீரகத்தை நீருடன் அரைத்து நல்லெண் ணெய்யில் கலந்து சிரங்கு, சொறி, தேமல் உள்ள இடங்களில் பூசி வர குணம் தெரியும்.

❖ கருஞ்சீரகத் தூள், கொத்தமல்லித் தூள் இரண்டை யும் பாலில் கலந்து சாப்பிட்டால் அல்லது கருஞ் சீரகத் தூளை தயிரில் கலந்து சாப்பிட்டால் அஜீ ரணம் மற்றும் வாயு உற்பத்தி குறையும்.

❖ கருஞ்சீரகத்தை தேனில் ஊறப்போட்டு அதி காலை வெறும் வயிற்றுடன் சாப்பிட்டால் ஞாபக சக்தி கூடும்.

❖ கருஞ்சீரகம் சக்தி வாய்ந்த ஆண்டி ஆக்ஸி டண்ட் (antioxidant) ஆகும். மற்றும் வீக்கம் தணிக்கும் (anti-inflammatory) குணத்தையும் கொண்டுள்ளது. இதனால் ஆஸ்துமா மற்றும் சுவாச ஒவ்வாமை நோய்களுக்கான தகுந்த எதிர்ப்பு சக்தியினைத் தருகிறது.

❖ சர்க்கரை வியாதியினால் பாதிக்கப்பட்டோரின் கணையம் (pancreas) எனப்படும் உடல் உறுப் பில் மடிந்து வரும் அணுக்களை இவ்விதை மறுவுயிர்ப்பிக்கும் ஆற்றலுடையது.

❖ தலைமுடி கொட்டுதல், இளவயதில் தலைமுடி நரைத்தல் உள்ளவர்கள் கருஞ்சீரக எண்ணெய்யை நன்கு தேய்த்து வருவதால் இதனைத் தடுக்க முடியும்.

கருஞ்சீரகத்தில் மரணத்தைத் தவிர அனைத்து நோய்களுக்கும் நிவாரணம் உள்ளது என்ற நபியவர் களது பொன்மொழி இன்று மருத்துவர்களால் கருஞ் சீரகம் தொடர்பாக கண்டறியப்பட்டுள்ள ஆய்வுக ளுக்கு 1400 வருடங்களுக்கு முன்பு கூறப்பட்டதாகும். ஒரு வார்த்தையில் நபியவர்கள் கூறிய விடயத்தில் எத்தனை எத்தனை மருந்துகள் இருக்கின்றன என்று பாருங்கள். மேலே உதாரணத்திற்காக நான் தொகுத் துத் தந்தவை சொற்பமே! இதுவல்லாத இன்னும் பல நோய்களுக்கும் கருஞ்சீரகத்தில் நிவாரணி இருக் கின்றது.

மேற்கண்ட நபிமொழிக்கு ஃபத்ஹுல்பாரி, உம் தத்துல் காரீ, அல்மின்ஹாஜ் போன்ற நூல்களில் விளக் கவுரைகளைப் பார்த்தால் கருஞ்சீரத்தின் சிறப்பைக் குறித்த விபரங்களை இன்னும் விரிவாக ஆசிரியர் கள் அனுபவ வாயிலாக எழுதிய விடயங்களையும் பார்க்கலாம். கருஞ்சீரகத்தின் நோய் நிவாரணித் தன்மை வரலாற்று நெடுகிலும் பயன்படுத்தப்பட் டுள்ள ஒன்று. அதனை மறுக்கவோ, பொய்ப்பிக்கவோ முடியாது. அது இறை அத்தாட்சிகளிலும் ஒன்று தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிரிப்புக்குள் பலவிதம்

- ❖ வெற்றியில் சிரிப்பவன் - வீரன்
- ❖ கண்பார்த்து சிரிப்பவன் - கஞ்சன்
- ❖ துன்பத்தில் சிரிப்பவன் - மனிதன்
- ❖ மகிமையில் சிரிப்பவன் - மன்னன்
- ❖ விளையாட்டில் சிரிப்பவன் - வீணன்
- ❖ இடம் பார்த்து சிரிப்பவன் - எத்தன்
- ❖ மாண்பில் சிரிப்பவன் - பண்பாளன்
- ❖ மோகத்தில் சிரிப்பவன் - வெறியன்
- ❖ கற்பனையில் சிரிப்பவன் - கவிஞன்
- ❖ ஓடவிட்டுச் சிரிப்பவன் - நயவஞ்சகன்
- ❖ தெரியாதென்று சிரிப்பவன் - நடிகன்
- ❖ நின்று சிரிப்பவன் - நினைவுள்ளவன்
- ❖ ஓயாமல் சிரிப்பவன் - பைத்தியக்காரன்
- ❖ கோபத்தில் சிரிப்பவன் - சிந்தனையாளன்
- ❖ கொடுக்கும்போது சிரிப்பவன் - சூழ்ச்சியாளன்
- ❖ இன்பத்தில் சிரிப்பவன் - ஏமாளி
- ❖ நினைவோடு சிரிப்பவன் - அறிவாளி
- ❖ இருக்குமிடமெல்லாம் சிரிப்பவன் - கோமாளி
- ❖ குழைந்து சிரிப்பவன் - சந்தர்ப்பவாதி
- ❖ நிலை கண்டு சிரிப்பவன் - காரியவாதி
- ❖ அருளுக்கு சிரிப்பவன் - ஆண்டி
- ❖ தற்பெருமையில் சிரிப்பவன் - கோழை
- ❖ நிலை மறந்து சிரிப்பவள் - காதலி
- ❖ காதலால் சிரிப்பவள் - மனைவி
- ❖ அன்பால் சிரிப்பவள் - அன்னை



நௌபர் பர்ஹானா
தரம் - 11
சுமையா பெண்கள் வி.க கிண்ணியா

நண்பர்களே உங்களுக்கு...

ஸாஜித் அஹமட் ஸஹ்தி
அல்ஹுமைஸரா தே.பா.
பேருவளை

- ❒ குற்றம் செய்பவனைப் பார்த்து குறை கூறுபவன் நண்பனல்ல;
  குற்றங்களை திருத்தும் குணமுள்ளவனே நண்பன்.
- ❒ கோபம் வந்தால் நண்பனை விட்டு விரண்டோடுபவன் நண்பனல்ல;
  அன்பாக அரவணைத்து ஒன்றாக இருப்பவனே நண்பன்.
- ❒ துன்பங்களைக் கண்டு துவண்டு போகின்றவன் நண்பனல்ல;
  துன்பங்களைத் துடைக்கும் துடைப்பமாக இருப்பவனே நண்பன்.
- ❒ அறிந்ததை மறைத்து அறியாமையைக் காட்டுபவன் நண்பனல்ல;
  அறிவையும் அமானிதமாய் பேணிச் சொல்லிக் கொடுப்பவனே நண்பன்.
- ❒ செல்வ நிலையில் துள்ளிக் குதிப்பவன் நண்பனல்ல;
  செல்வ நிலையிலும் எளிமையைக் கடைப்பிடிப்பவனே நண்பன்.
- ❒ குறிப்பாக கண்ணாடி குறைகளை சுட்டிக் காட்டுவது போல்
  குறைகளை சரியாக சுட்டிக் காட்டும் பொன் நாடிகளே உண்மையான நண்பர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைத் துளிகள்

ஏ.டபிள்யூ.எம். சைய்த்
தரம் - 11
க/இக்ரா முஸ்லிம் ம.வி.
உளப்பனை

- கஷ்டப்படுபவனுக்கு சிரிப்பு தெரியாது. சிரிப்பவனுக்கு கஷ்டம் தெரியாது. கஷ்டத்திலும் சிரிப்பவனுக்கு தோல்வியே கிடையாது.
- நண்பன் வெற்றி பெறும்போது "அவன் என் நண்பன்'' என பெருமை கொள். நண்பன் தோல்வி அடையும்போது ''நான் உன் நண்பன்'' என அருகில் நில்.
- பொய்யான அன்பை தேடிச் செல்லும் சிலர் உண்மையான அன்பை மதிப்பதில்லை. உண்மை புரியும்போது அன்பானவர்கள் அருகில் இருப்பதில்லை.
- எழுந்து நடந்தால் இமயமலையும் நமக்கு வழி கொடுக்கும். உறங்கிக் கிடந்தால் சிலந்திவலையும் எம்மைச் சிறைபிடிக்கும்.
- நண்பனையும் நேசி; எதிரியையும் நேசி. நண்பன் உன் வெற்றிக்கு துணையாக இருப்பான்; எதிரி உன் வெற்றிக்கு காரணமாக இருப்பான்.
- மனிதா! நீ அதிகம் இனிப்பாகவும், அதிகம் கசப்பாகவும் ஆகிவிடாதே! மனிதர்கள் உன்னை விழுங்கியும் துப்பியும் விடுவார்கள்.
- பணம், பதவி, மானம், வார்த்தை இவை யாவும் உன்னிடம் உள்ளவரையே உனக்கு அடிமை. பறிபோனால் நீ அடிமை.
- உங்கள் இரகசியங்களை யாரிடமும் சொல்லாதீர்கள். உங்களாலேயே அதை இரகசியமாக வைக்க முடியாதபோது மற்றவர்களால் எவ்வாறு முடியும்?
- தோல்விகளிடம் வழிகேட்டுத்தான் வெற்றியின் வாசல் படிக்கு வந்து சேர முடியும். தோல்விகளை ஏற்கப் பழகிக் கொள்வோம்.

உலக நோபல் விருதுகள்

ஏ.எச். வஜீஹா பேகம்
தரம் - 10
கமு/ புலவர்மணி ஷரிபுத்தீன் வி.

1. நோபல் பரிசின் மதிப்பு
 - 30 இலட்சம் (சுவீடிஷ் கிரவுண்ஸ்)
2. நோபல் பரிசு வழங்கப்படாத முக்கியமான துறை
 - கணிதம்
3. நோபல் பரிசு வழங்கப்பட்ட முதல் தமிழர்
 - சேர். சீ.வீ. இராமன்
4. அதிக தடவைகள் நோபல் விருது பெற்ற நாடு
 - அமெரிக்கா
5. நோபல் பரிசு வழங்கப்பட்ட முதல் இஸ்லாமியப் பெண்மணி - ஷிரின் எபாடி
6. நோபல் பரிசு வழங்கப்பட்ட ஆசியாவின் முதல் நபர் - ரவீந்திரநாத் தாகூர்
7. இரண்டு தடவைகள் நோபல் பரிசு பெற்ற முதல் பெண்மணி - மேரிகியூரி (1903-1911)
8. தனது வரலாற்றுக் குறிப்புக்காக இலக்கிய நோபல் பரிசு பெற்ற பிரித்தானியப் பிரதமர்
 - வின்ஸ்டன் சேர்ச்சில்
9. அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படுவதை சிபாரிசு செய்யும் பாராளுமன்றம்
 - நோர்வே பாராளுமன்றம்
10. நோபல் பரிசில் உயர் மதிப்புடைய உலக சமாதான விருது மட்டும் வழங்கும் இடம்
 - நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமான சில தினங்கள்

- ஊனமுற்றோர் தினம் — பெப்ரவரி 11
- புகைபிடித்தல் எதிர்ப்பு தினம் — மே 31
- உலக அகதிகள் தினம் — ஜூன் 20
- சர்வதேச ஒலிம்பிக் தினம் — ஜூன் 23
- போதைப்பொருள் எதிர்ப்பு தினம் — ஜூன் 26
- உலக குடித்தொகை தினம் — ஜூலை 11
- சர்வதேச ஓசோன் பாதுகாப்பு தினம் — செப்டெம்பர் 16
- உலக சிக்கன தினம் — ஒக்டோபர் 18
- சர்வதேச முதியோர் தினம் — ஒக்டோபர் 1
- உலக மனித உரிமை தினம் — டிசம்பர் 10

சபா இர்ஷாட்
தரம் - 4
மா/ ஆமினா பெண்கள் தே.பா.
மாத்தளை

நான்கு வகையான மனிதர்கள்

எப். ஹஸீனா முஸ்தபாலெப்பை
5 ஆம் வருடம்
பாத்திமா ஸஹ்ரா அ.க.



- ஒரு மனிதனுக்கு அறிவுண்டு. ஆனால் தனக்குத் தெரியும் என்பது அவனுக்குத் தெரியாது. இவன் அசடன். இவனுக்கு ஞாபகமூட்டுங்கள்.
- ஒரு மனிதனுக்கு அறிவில்லை. தனக்கு அறிவில்லை என்பது அவனுக்குத் தெரியாது. இவன் முட்டாள். இவனைப் புறக்கணித்து விடுங்கள்.
- ஒரு மனிதனுக்கு எதுவும் தெரியாது. தனக்கு எதுவும் தெரியாது என்பது அவனுக்குத் தெரியும். இவன்தான் அறிவற்றன். இவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.
- ஒரு மனிதனுக்கு அறிவுண்டு. தனக்கு அறிவிருக்கிறது என்பதும் அவனுக்குத் தெரியாது. இவன் தான் அறிஞன் இவனைப் பின்பற்றுங்கள்.
- நான்கு வகை மனிதர்களில் நீங்கள் எந்தவகை மனிதர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநோத உயிரினங்கள்

- அதிக நீர் அருந்தும் பறவை – **புறா**
- மிகச் சிறிய முட்டையிடும் பறவை – **தேன்சிட்டு**
- சப்த்தமிடாத விலங்கு – **ஒட்டகச்சிவிங்கி**
- ஞாபகசக்தி கூடிய விலங்கு – **யானை**
- நீல நிற இரத்தத்தை கொண்ட உயிரினம் – **நண்டு**
- பறக்கும்போதே தூங்கும் பறவை – **அல்பட்ரோஸ்**
- பல்லில்லாத முலையூட்டி – **தேவாங்கு**
- மிகப் பெரிய வாயுள்ள விலங்கு – **நீர்யானை**
- பித்தப்பை இல்லாத முலையூட்டி – **எலி**
- நாக்கு இல்லாத விலங்கு – **முதலை**
- கடல் நீரை பருகும் பறவை – **பென்குயின்**

எஸ். கதீஜா
தரம் 9





மனித இயல்பு

❖ எல்லோரும் நீதியை விரும்புவது உண்மைதான்; ஆனால் அடுத்தவர்கள் விஷயத்தில் மட்டும்தான்!

❖ நரகவாசியை அடையாளம் காண விரும்புகிறீர்களா? அவன் உட்கார்ந்திருக்க அவனைச் சுற்றி ஒரு கூட்டம் கைகட்டி நிற்கும். அதுவே அவனுடைய அடையாளம்!

❖ ஒரு காலமிருந்தது; மக்கள் முட்களற்ற இலைகளாயிருந்தனர். அது மாறிவிட்டது! இப்போது அவர்கள் இலைகளற்ற முட்களாகி விட்டனர்.

❖ இனிமையாகப் பழகும் நண்பர்களை விட கசப்பான எதிரிகளுக்கு கடமைப்பட்டவர்களாகிறோம். ஏனெனில் எதிரிகளே உங்களைப் பற்றிய உண்மைகளைப் புரிய வைக்கிறார்கள்.

❖ வானத்தில் கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் இருப்பதாகக் கூறினால் நம்புபவர்கள், 'இப்போதுதான் பெயிண்ட் அடித்துள்ளது' என்றால் உடனே தொட்டுப் பார்த்துதான் ஒப்புக் கொள்வார்கள்.

❖ கள்ளத்தனமான குள்ளநரிக் குணமுடையவர்களை உலகம் 'சமத்தன்' என்றும், நாணயமான கண்ணியமானவர்களை 'அப்பாவி' என்றும் அழைக்கின்றது.

❖ எல்லோரும் அவரவரை விட்டு விட்டு வேறு யார் யாரையோ சீர்திருத்தக் கிளம்பிக் கொண்டுள்ளார்கள்!

❖ செல்வந்தன் உடல்நலம் குன்றியபோதுதான் செல்வத்தின் வலுவற்ற தன்மையை உணர்கின்றான்.

சிபானா ஹுசைன்
பாத்திமா ஸஹ்ரா பெ.அ.க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Miss. Aysha Hassan

Assalamu alaikum dear friends,

In this issue, let me speak of nutritional power houses! Do you have any idea of them? Yes I am speaking about "green leaves". Green leaves are considered to be nutritional boosters because of their miraculous effects on the one who consumes them. My dear friends! I know that all of you are running a competitive race in order to achieve your goals and targets. And what's my advice to you is that in the process of working hard to achieve your aims, never ever forget to take care of your health as well. Infact, this will contribute you to perform even better.

Now, shall we take a look at the benefits of adding green leaves on to our diet!

- Consuming dark green leafy vegetables increases memory power.
- The toxic substances collected in our body get washed away when we have more green leaves in our meals.
- Eating green leaves relieves us from constipation, which is an increasing health disorder among teenagers.
- Green leaves improve eye sight.
- They cure many kidney related disorders.
- They help loose fat.
- Intake of ample of green leaves add glow to the face as well.

So friends! Hope you would have understood the importance of having green leaves as much as possible. Another important information which I would like to convey is that, try to make your own plot of green leaves rather than relying on those which you bought from super markets. In super markets the vegetable vendors most often spray chemicals and various other harmful substances in order to make the leaves appear fresh and pleasing. Some vendors



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

do even worse acts like dipping the green leaves in to a drain or a pit of dirty water. What they want is to make them look fine for the moment.Thus, be cautious my dear friends, so that you don't fall in to trouble. Yet, don't forget to add at least a little bit of green, which is safe, in your meals.

Here are some top eight recommended greens for your best

- SpinachCorrinder greens
- GotukolaLettuce
- Turnip greensMukunuvenna
- Cabbage
- Mint greens

Joke of the day

Teacher: "eating spinach adds Colour to your cheeks!"

Student: Yuck!!! I don't won't green cheeks!!!

Hadith of the month

"The Prophet (Sallallahu 'Alaihi WaSallam) said, "On the Day when all mankind will stand before the Lord of the Worlds, some of them will be enveloped in their sweat up to the middle of their ears."

Your Corner

Tips to make your life perfect

- It is impossible to fail in many ways while to succeed is possible in only one way.
- Nothing is impossible, every thing is possible.
- Trust is the gate way to your life.
- "can't "is the slogan of foolishness.
- Be perfect in your work every day.
- No one is trust worthy around you, because every one may be traitors.
- Always believe in yourself.
- Don't believe any one in short period.
- Don't talk too much but think more.
- Try to live without depending on others.
- 3 solutions for every problem, accept it, change it or leave it.

Touch the fire, enjoy your life and be a lucky guy!

Master: A.W. MazoonAhamed
2014(o/l batch)
BT/BC/Oddamavadi Central College

The power you have
Is truly amazing
You are a beautiful so beautiful one.
Your modesty is nobler than the full moon
Your compassion is more beneficial than the rain
Your moral is more sublime than the musk.
Think not you are nothing
But you are everything
You are most precious and a treasure than a jewel.
Preserve your beauty and your chastity
Oh! My dear sister!
"Hijab" is your shield which makes you lead
It's not shameful but it's graceful Sister,
Pursue your journey along
the garden of paradise
That lasts for an eternity because,
You're a queen of Islam

Queen of Islam

S. Silma Marzook
China Fort, Beruwala.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Reading



"Reading maketh a full man". Reading is a good hobby. Many noble men in the world had been ardent readers when they were children. This proves the saying "reading maketh a full man".

There are many varieties of books such as fiction, biography, poetry etc……they enrich the different faculties of our brain. Every person should become a good reader. Firstly, we should be humble enough to obey the author and to open our minds as wide as possible. Unless a person does so, he will never be able to become a good reader.

Most people try to dictate the authors. They start reading when the facts there in do not appeal their own logic that may be either right or wrong. By doing so, they are preventing themselves from entering in to the joyous world of reading

M.N. Fathima
Grade – 9A
Ku/Hizbullah Central College,
Kurunegala.

Let's save the trees
for our survival

PUBLIC LIBRARY
JAFFNA

The natural environment is a very intimate comrade of us. Also most probably the nature is covered with the trees as a green carpet. Trees are the major source where the oxygen is produced.

Eventhough Oxygen is the main necessity for the lives of us. due to of globalization, urbanization and modernization, this is eliminated from this illusive world. So, the man wants to be alert to face the challenges, caused by his activities. For that he just wants to clasp the spirit of nature firmly. As human who carry a sound knowledge about the world, we should think about the steps to be taken to save the nature.

My dearest friends! We are not ignorant men. We have been granted the wisdom by Allah. So, we just have to think about the future generations too. So, let's grow the trees before we fall in adversity.



Mohammed Jabeer
Fathima Mubashshira
2017 A/L Batch

I'm eagerly waiting for your contributions with comments, stories,- poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

I learn every day

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

ஹிஜ்ரத் – اَلْهِجْرَةُ

اَلْأَبُ : مَاذَا دَرَسْتُمُ اَلْيَوْمَ فِيْ حِصَّةِ الدِّيْنِ.

தந்தை: சமயப் பாடத்தில் இன்று நீங்கள் எதைக் கற்றீர்கள்?

اَلْإِبْنُ : دَرَسْنَا قِصَّةً عَظِيْمَةً يَاأَبِيْ.

மகன்: தந்தையே! ஒரு பெரிய சம்பவத்தைக் கற்றுக் கொண்டோம்.

اَلْأَبُ : أَيَّ قِصَّةٍ دَرَسْتُمْ ؟

தந்தை: எந்தச் சம்பவத்தைக் கற்றுக் கொண்டீர்கள்?

اَلْإِبْنُ : قِصَّةَ اَلْهِجْرَةِ.هِجْرَةَ الرَّسُوْلِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مِنْ مَكَّةَ إِلَي الْمَدِيْنَةِ.

மகன்: மக்காவிலிருந்து மதீனாவுக்கு தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஹிஜ்ரத் செய்த சம்பவத்தைக் கற்றுக் கொண்டோம்.

اَلْأَبُ : حَقًّا يَا وَلَدِيْ مَا أَعْظَمَ تِلْكَ الْقِصَّةُ !

தந்தை: மகனே! உண்மையிலேயே அது எவ்வளவு பெரிய சம்பவம்!!

اَلْإِبْنُ : لَقَدْ هَاجَرُوْا اَلْمُسْلِمُوْنَ إِلَى اَلْحَبَشَةِ ثُمَّ هَاجَرَ إِلَى الْمَدِيْنَةِ.

மகன்: முஸ்லிம்கள் எதியோப்பியாவுக்கு ஹிஜ்ரத் செய்தார்கள். பின்னர் அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தார்கள்.

اَلْأَبُ : تَذَكَّرْتُ الْآنَ لَقَدْ إِشْتَرَيْتُ كِتَابًا عَنِ اَلْهِجْرَةِ قَبْلَ أُسْبُوْعٍ وَأَظُنُّهُ الْآنَ فِيْ اَلْمَكْتَبَةِ.

தந்தை: இப்போதுதான் எனக்கு ஞாபகம் வருகின்றது. ஒரு வாரத்துக்கு முன்னர் ஹிஜ்ரத் பற்றிய ஒரு புத்தகம் வாங்கினேன். அது இப்போது வாசிகசாலையில் இருக்கும் என்று நினைக்கின்றேன்.

اَلْإِبْنُ : أَرْجُوْ أَنْ تَحْكِيَ لَنَا اَلْقِصَّةَ يَا أَبِيْ.

மகன்: தந்தையே! நீங்கள் அந்தக் கதையை எங்களுக்குக் கூறுவதை விரும்புகின்றேன்.

اَلْأَبُ : حَسَنًا يَا وَلَدِيْ أَخْبِرْ إِخْوَتَكَ لِأَحْكِيْهَا لَكُمْ جَمِيْعًا.

தந்தை: நல்லது மகனே! உங்கள் எல்லோருக்கும் அதைச் சொல்வதற்காக உனது சகோதரர்களுக்கும் அறிவியும்.

مَاذَا دَرَسَ اَلْأِبْنُ فِيْ حِصَّةِ الدِّيْنِ ؟

சமயப் பாடத்தில் மகன் எதைக் கற்றுக் கொண்டான்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

إِلَي أَيْنَ هَاجَرَ الْمُسْلِمُوْنَ ؟
முஸ்லிம்கள் எங்கு ஹிஜ்ரத் சென்றார்கள்?

مَاذَا اِشْتَرَيْ اَلْأَبُ ؟
தந்தை என்ன வாங்கினார்?

مَتَي اِشْتَرَاهُ ؟
அவர் அதை எப்போது வாங்கினார்?

مَاذَا طَلَبَ الْأَبْنُ مِنْ وَالِدِهِ ؟
மகன் தந்தையிடம் என்ன வேண்டினான்?

قَالَ اَلْأَبُ : هَاجَرَ الرَسُوْلُ صَلَّى اَللهُ عَلَيْهِ وَسَلَّمَ مِنْ مَكَّةَ إِلَى الْمَدِيْنَةِ.
நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு நாடு துறந்து சென்றார்கள்.

كَانَ مَعَهُ صَدِيْقُهُ أَبُوْ بَكْرٍ رَضِيَ اَللهُ عَنْهُ.
அவருடன் அவருடைய தோழர் அபூ பக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் இருந்தார்கள்.

كَانَا يَرْكَبَانِ نَاقَتَيْنِ سَرِيْعَتَيْنِ.
அவ்விருவரும் வேகமான இரண்டு ஒட்டகங்களில் சவாரி செய்தார்கள்.

كَانَ كُفَّارُ قُرَيْشٍ يَبْحَثُوْنَ عَنْهُمَا فِيْ الصَّحْرَاءِ.
குறைஷி நிராகரிப்பாளர்கள் அவ்விருவரையும் பாலைவனப் பிரதேசத்தில் தேடிக் கொண்டிருந்தனர்.

دَخَلَ الرَسُوْلُ مَعَهُ أَبُوْ بَكْرٍ غَارَ حِرَاءَ.
நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் அவருடன் அபூ பக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் ஹிராக் குகையினுள் நுழைந்தார்கள்.

كَانَ الرَّسُوْلُ يَقُوْلُ لِصَدِيْقِهِ : (لاَ تَحْزَنْ إِنَّ اللهَ مَعَنَا)
நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தனது நண்பரிடம் ''அஞ்சாதீர்! நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான்'' என்று கூறுபவர்களாக இருந்தார்கள்.

وَصَلَ الرَسُوْلُ صَلَّى اَللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ سَالِمًا إِلَيِ الْمَدِيْنَةِ فَاسْتَقْبَلَ أَهْلُ الْمَدِيْنَةِ بِا لأَنَاشِيْدِ.
நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பாதுகாப்பாக மதீனாவை வந்தடைந்ததும் மதீனத்து மக்கள் அவர்களை பாடல்கள் மூலம் வரவேற்றனர்.

فِيْ الْمَدِيْنَةِ أَسَّسَ الرَسُوْلُ صَلَّى اَللهُ عَلَيْهِ وَسَلَّمَ أَوَّلَ مَسْجِدٍ لِلْمُسْلِمِيْنَ هُنَاكَ.
மதீனாவில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அங்குள்ள முஸ்லிம்களுக்கான முதலாவது பள்ளிவாசலை நிறுவினார்கள்.

وَمِنْ ذَلِكَ الْمَسْجِدِ اِرْتَفَعَ صَوْتُ الْمُؤَذِّنِ عَالِيًا (اَللهُ أَكْبَرُ ...... اَللهُ أَكْبَرُ)
அப்பள்ளிவாசலில் இருந்துதான் ''அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்...'' (அல்லாஹ் மிகப் பெரியவன்... அல்லாஹ் மிகப் பெரியவன்... என்ற முஅத்தினுடைய கோஷம் வானளாவ உயர்ந்தது.)

وَمِنَ الْمَدِيْنَةِ اِنْطَلَقَ نُوْرُ الْإِسْلاَمِ فَوَصَلَ إِلَي بِلاَدٍ بَعِيْدَةٍ,وَاِنْتَشَرَ دِيْنُ اللهِ فِيْ الْعَالَمِ.
மதீனாவிலிருந்துதான் இஸ்லாம் எனும் ஜோதி நகர ஆரம்பித்து தூர தேசங்களைச் சென்றடைந்து அல்லாஹ்வுடைய மார்க்கம் உலகெங்கும் பரவியது.

اَلْهِجْرَةُ حَادِثٌ مُهِمٌ فِيْ تَارِيْخِ الْمُسْلِمُوْنَ, وَفِيْ كُلِّ سَنَةٍ يَحْتَفِلُ الْمُسْلِمِيْنَ فِيْ كُلِّ مَكَانٍ بِذَلِكَ الْحَادِثِ الْعَظِيْمِ.
ஹிஜ்ரத் என்பது இஸ்லாமிய வரலாற்றில் மிக முக்கியமான ஒரு சம்பவம். ஒவ்வோர் ஆண்டிலும் முஸ்லிம்கள் எல்லா இடங்களிலும் பாரிய அந்த நிகழ்வைக் கொண்டாடுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு

தரம் 10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

தரம் - 10

01.

1. வரலாற்றுக் காலத்தில் இல்லத் தலைவன் ஆற்றிய கடமைகள் 03 தருக.
2. 'பருமக' பதவி வகித்தோர் ஆற்றிய பணிகள் 4 தருக.
3. அரசின் வளர்ச்சிக்கு பண்டுகாபயன் ஆற்றிய பங்களிப்பு இரண்டை விளக்குக.
4. "இலங்கையில் மத்திய ஆட்சியை நன்கு உறுதிப்படுத்திய மன்னனாக துட்டகைமுனு விளங்குகின்றான்" இதனை 3 உதாரணங்களுடன் விளக்குக.

விடைகள்

1. குடும்ப அங்கத்தவர்களை ஆபத்துக்களில் இருந்து பாதுகாத்தல்.

   அவர்களின் உணவுத் தேவை போன்ற தேவைகளை நிறைவேற்றுதல்.

   குடும்ப உறுப்பினர்களின் ஒழுக்கத்தை மேம்படுத்தல்.

   கிராமத்தில் மேற்கொள்ளப்படும் பொதுப் பணிகளில் பங்கேற்றல்.

2. பல கிராமங்களை உள்ளடக்கிய பிரதேசத்தில் வாழும் மக்களது தேவைகளை நிறைவேற்றல். உதாரணம், நீர்த் தேவை.

   கமிகமாருடன் கலந்துரையாடி கிராமங்களில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்தல்.

   குளத் தொகுதியை நன்கு பராமரித்தல்.

   பிரதேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.

3. **அனுராதபுரத்தை தலைநகரமாக்கியமை**

பண்டுகாபய மன்னன் மல்வத்து ஓயாவுக்கு அருகில் இருந்த அனுராதகம என்ற கிராமத்தை அனுராதபுரம் என்ற பெயரில் தலைநகரமாக்கினான். இதன் பின்பே அதிகாரங்கள் தலைநகருக்கு கொண்டு வரப்பட்டன. இலங்கையின் சகல பிரதேசங்களையும் கட்டுப்படுத்தக் கூடிய நிருவாக மையமாக அவன் அனுராதபுரத்தை மாற்றினான். நகரில் உள்ள கொல்லர்கள் வழிபட கம்மாரதேவ என்ற தெய்வத்திற்கு ஒரு கோயிலையும், வேடர்கள் வழிபட மேற்கு வாயிலில் ஒரு கோயிலையும் மன்னன் கட்டினான். இவ்வாறு அனுராதபுரத்தில் இருந்து மத்திய ஆட்சியை நடத்திய மன்னனாக பண்டுகாபயன் விளங்குகின்றான்.

பருமகமார்களைத் தோற்கடித்தமை

பண்டுகாபயன் அதிகாரங்களை மையப்படுத்துவதற்கு முன்பு பருமகமார்களே பிரதேச ஆட்சியாளர்களாக இருந்தனர். இவர்கள் இலங்கையின் பல பிரதேசங்களிலும் பிரதேச ஆட்சியாளர்களாக விளங்கினர். இவர்களைத் தோற்கடித்து, சகல அதிகாரங்களையும் மத்திய மயப்படுத்திய ஆட்சியாளனாக பண்டுகாபயன் விளங்குகின்றான். பண்டுகாபயன் சிறுவனாக இருந்தபோது அவனது மாமன்மார் அவனை கொலை செய்ய முயன்றார்கள். மாமன்மார் பருமக பதவியை வகித்தார்கள். அவர்கள் அனைவரையும் தோற்கடித்த மன்னன் அதிகாரங்களை ஒருமுகப்படுத்தினான்.

4. **பருமகமாரின் ஒத்துழைப்பை பெற்றமை**

அனுராதபுரத்தில் 44 வருடங்கள் நீடித்த சோழர் ஆட்சியை முடிவுக்கு கொண்டுவர துட்டகைமுனு நடவடிக்கை எடுத்தான். தந்தை காவந்தீசன் இறந்த பின்பு எல்லாளனைத் தோற்கடிக்க பெரும் படையொன்றைத் திரட்டினான். அப்படையை வழிநடத்தும் பொறுப்பை பருமகமாரவிடம் ஒப்படைத்தான். பருமகமார்களாக கடமையாற்றிய வேலுசுமண, புஸ்ஸதேவ, தேரபுத்தாய முதலிய பத்து பருமகமார்களை தனது தளபதிகளாகத் தெரிவு செய்தான். பிராந்திய ஆட்சியாளர்களாக விளங்கிய பருமகமார்களுக்கு தளபதிகளாக தனது அதிகாரத்தின் கீழ் அனைத்து பகுதிகளையும் கொண்டு வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலனோம்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டமை

எல்லாளனைத் தோற்கடித்து அதிகாரமுள்ள மகா ராஜாவாக மகுடம் சூடிக் கொண்டான். முழு நாட்டுக்கும் தனது அதிகாரத்தை வெளிப்படுத்த துட்டகைமுனு மன்னன் பல நடவடிக்கைகளிலும் ஈடுபட்டான். ருவன்வலிசாய, மிரிசவெட்டி,லோவமகாபாய ஆகிய வணக்கஸ்தலங்களை இவன் கட்டி தனது செல்வாக்கை உயர்த்தினான். மேலும் ருவன்வெலிசாயாவின் நாற்றிசை வாயில்களிலும் தானமளிக்க ஏற்பாடு செய்தான். ருவன்வலிசாயாவை கட்டியவர்கள் அனைவருக்கும் சம்பளம் வழங்க துட்டகைமுனு ஏற்பாடு செய்தான்.

வெளிநாட்டு வர்த்தகத்தை தன்வசப்படுத்தியமை

இவனது காலத்தில் இந்து சமுத்திரத்தில் வியாபார நடவடிக்கைகள் முக்கியம் பெற்றன. மாந்தை சர்வதேச வர்த்தக துறைமுகமாக விளங்கியது. பல நாட்டு வர்த்தகர்களும் இலங்கையில் வர்த்தகத்தை மேற்கொள்ள இத்துறைமுகத்திற்கு வந்தார்கள். இத் துறைமுகத்தை சோழர்களிடமிருந்து மீட்டதன் மூலம் துட்டகைமுனு நாட்டுக்கு மகத்தான சேவையை செய்தான். இத்துறைமுகத்தின் மூலம் கிடைத்த வருமானத்தை நாட்டின் அபிவிருத்திக்காக செலவிட்டான்.

தரம் - 11

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

A தேசிய அரசுப் பேரவை
B சனப் பிரதிநிதிகள் சபை
C ஆளுநர்
D நிருவாகக்குழு முறை
E 3 செயலாளர்கள்
F செனற் சபை

1. மேலுள்ளவற்றுள் சோல்பரி யாப்பில் மட்டும் இடம்பெற்ற இரண்டு அம்சங்கள்.
   i. AC ii. BC
   iii. DE iv. Bf

2. டொனமூர் யாப்பில் மட்டும் இடம்பெற்ற இரண்டு அம்சங்கள்
   i. BD ii. DE
   iii. AD iv. BC

3. டொனமூர் யாப்பிலும், சோல்பரி யாப்பிலும் இடம்பெறாத இரண்டு அம்சங்கள்.
   i. AC ii. AD
   iii. CF iv. EF

4. மனிங் யாப்பில் இடம்பெற்ற அம்சம்.
   i. A ii. B
   iii. C iv. D

5. சோல்பரி யாப்பில் இடம்பெற்ற செல்வாக்கு இல்லாத ஓர் அமைப்பு.
   i. A ii. B
   iii. D iv. F

6. 5 ஆம் மகிந்தன் காலத்தில் வாழ்ந்த ஒருவர் அறிந்திருக்க முடியாத ஒரு விடயம்.
   i. கலாவாவி அமைக்கப்பட்டமை
   ii. பராக்கிரம சமுத்திரம் அமைக்கப்பட்டமை.
   iii. அபயவாவி அமைக்கப்பட்டமை
   iv. மின்னேரியாக் குளம் அமைக்கப்பட்டமை.

7. 1822 இல் முதலாவது கோப்பித் தோட்டம் அமைத்த இடம்.
   i. கண்ணொறுவை ii. சிங்ஹபிட்டி
   iii. கண்டி iv. தலவாக்கலை

8. பல் பயிர் யுகத்தில் வளர்க்கப்பட்ட ஒரு பயிர்.
   i. கறுவா ii. பருத்தி
   iii. குரக்கன் iv. சிங்கோனா

9. கலாவாவியை புனரமைத்த ஆளுநர்.
   i. ஆதர் கோடன்
   ii. ஹென்ரி வோட்
   iii. ஹெர்கியூலிஸ்
   iv. ஆத்தர் பிலோக்

10. கோப்பி பயிருக்கு இலை வெளிறல் நோய் ஏற்பட்ட ஆண்டு.
    i. 1848 ii. 1658
    iii. 1868 iv. 1895

11. நிரல் 1 இல் குளங்களும் நிரல் 2 இல் அவற்றைக் கட்டிய மன்னர்களும் தரப்பட்டுள்ளனர்.

நிரல் 1	நிரல் 2
1. கிரித்தலைக் குளம்	A 2 ஆம் முகலன்
2. தோப்பா வாவி	B 2 ஆம் அக்போ
3. பதவியாக் குளம்	C உபதிஸ்ஸ
4. கவுடுலு வாவி	D மகாசேனன்

நிரல் 1 க்கு ஏற்ப நிரல் 2 ஐ பொருத்தினால் அமையும் சரியான விடை.
    i. BCAD ii. BCDA
    iii. CBAD iv. CBDA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. மகிந்த தேரர் இலங்கைக்கு வந்த ஆண்டு.

i. கி.மு. 435 ii. கி.மு. 475

iii. கி.மு. 457 iv. கி.மு. 247

13. சூரதிஸ்ஸ மன்னன் காலத்தில் யாருடைய ஆக்கிரமிப்பு நிகழ்ந்தது?

i. எல்லாளன் ii. சேன,குத்திக

iii. புலகண்டன் iv. இராஜ இராஜ சோழன்

14. இரண்டாம் பராக்கிரமபாகு ஆட்சி செய்த தலைநகரம் எது?

i. குருணாகல ii. தம்பதெனிய

iii. யாப்பகூவ iv. கம்பளை

15. இரத்த ஓட்டத்தை முதலில் கண்டுபிடித்த விஞ்ஞானி.

i. ஐசக் நியூட்டன்

ii. கலீலியோ கலிலி

iii. வில்லியம் ஹாவே

iv. கொப்பணிகஸ்

16. இரட்டை ஆட்சி முடிவுக்கு வந்த ஆண்டு.

i. 1801 ii. 1805

iii. 1798 iv. 1802

17. ஆங்கிலேயர் திருகோணமலை துறைமுகத்தைக் கைப்பற்றிய ஆண்டு.

i. 1795 ii. 1796

iii. 1800 iv. 1815

18. டொனமூர் யாப்பில் சட்டம் இயற்றும் சபையில் இருந்த மொத்த அங்கத்தவர்கள் எண்ணிக்கை.

i. 45 ii. 47

iii. 50 iv. 61

19. கண்டி ஒப்பந்தத்தில் உள்ள வாசகங்களின் எண்ணிக்கை.

i. 13 ii. 15

iii. 12 iv. 18

20. லங்கா சமசமாஜக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு.

i. 1936 ii. 1920

iii. 1935 iv. 1947

விடைகள்

1.	iv	11.	i
2.	ii	12.	iv
3.	i	13.	ii
4.	iii	14.	ii
5.	iv	15.	iii
6.	ii	16.	iv
7.	ii	17.	i
8.	iv	18.	iv
9.	i	19.	iii
10.	iii	20.	iii

நற்சிந்தனை - பொய்

"அல்லாஹ்வின் தூதரவர்கள் பொய்யை வெறுத்ததுபோல வேறெதனையும் வெறுத்ததில்லை. ஒரு மனிதன் பொய் சொன்னான் என்ற செய்தி எட்டினால் அந்த மனிதன் திருந்தி பாவமன்னிப்புத் தேடினான் என்ற மறுசெய்தி வரும் வரை அந்த மனிதனின் கண்ணியத்தையும் மரியாதையையும் காற்றிலே வீசி விடுங்கள்." (அஹ்மத்)

பொய் இறைமார்க்கத்திலிருந்து ஒருவனைத் தூரமாக்கி விடுகின்றது. பொய் பேசும் ஒருவனுக்கும் இஸ்லாத்துக்குமிடையில் தொடர்பற்றுச் செல்லும் நிலையை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் விளக்கினார்கள்.

"ஒரு முஃமினிடம் எல்லாத் தீமைகளும் இருக்கலாம். ஆனால் அவனிடம் பொய்யும் நேர்மை இன்மையும் இருக்கக் கூடாது." (அஹ்மத்)

ஒரு முஸ்லிம் கோழையாக இருக்கலாமா என்று அல்லாஹ்வின் தூதரிடம் வினவப்பட்டது. அதற்கவர் ஆம் என்று பதிலளித்தார்கள். ஒரு முஸ்லிம் கஞ்சனாக இருக்கலாமா என்று வினவப்பட்டது. அதற்கவர் ஆம், என்று பதில் அளித்தார். ஒரு முஃமின் பொய்யனாக இருக்கலாமா? என்று வினவப்பட, முடியாது என்று பதிலளித்தார்கள். (முவத்தா)

மனிதனது வாயிலிருந்து வெளிப்படும் மிகச் சிறிய வார்த்தைகளும் கூட சில வேளைகளில் பொய்யாகவே மதிப்பீடு செய்யப்படுகின்றன என்பதனை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் விளக்கினார்கள்.

"ஒரு குழந்தையை அழைத்து அந்தக் குழந்தையிடம் நான் இன்னதை உனக்குத் தருவேன் எனக் கூறியவர்கள் அதனைத் தரவில்லை என்றால் அவர் அங்கே ஒரு பொய்யைச் சொல்லிவிட்டார்." (அஹ்மத்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஹாப் ஏ. ஹனீபா (இஸ்லாஹி)

கற்றலில் ஏற்படும் இடையூறுகள்

3. உங்களுடைய கணனி

கம்பியூட்டர் என்பது இன்று கற்றலுக்கு ஓர் இன்றியமையாத சாதனமாக மாறி வருவதை யாரும் மறுக்க முடியாது. எனினும், நீங்கள் எந்த விடயத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைக்கின்றீர்களோ அந்தப் பக்கம் உங்களுடைய கணனியின் திரையில் இல்லையாயின் கணனி என்பது உங்களுடைய கற்றலுக்குப் பெரும் தடையாகவே அமைந்து விடும்.

கம்பியூட்டர் மூலமாக பல தேவைகளை நிறைவேற்ற முடியும். இருப்பினும் சரியான நோக்கத்தோடு குறிப்பிட்ட வேலையை மாத்திரம் முடிப்பதற்காகப் பயன்படுத்தினால் தவிர. அதுவும் எமது படிப்புக்குத் தடங்கலாக அமைந்து விடுகின்றது. உதாரணமாக சிலவற்றை நோக்குவோம்.

கம்பியூட்டர் விளையாட்டுக்கள்

கம்பியூட்டர் விளையாட்டுக்களிலும் பிள்ளைகள், குறிப்பாக ஆண் மாணவர்கள் அதிக நேரத்தைக் கடத்துகின்றனர். இது மாணவர்களின் துரிதமான கற்றலுக்கு பங்கம் விளைவிக்கின்றது. தெளிவான சிந்தனை, புத்தாக்க சிந்தனை, மனதை ஒரு நிலைப்படுத்திக் கற்றல் போன்றவற்றுக்கும் தடங்கலாக அமைகின்றது.

தீங்கற்றது, மாசற்றது போல் தோன்றும் ஒரு விளையாட்டுக் கூட உண்மையில் மாணவர்களுக்குத் தீங்கிழைக்கலாம். கம்யூட்டர் விளையாட்டுக்கள் கற்றலுக்குத் தடையாக அமைவது மாத்திரமன்றி, வன்முறைகளைக் கொண்டவையாகவும், மாணவர்களைப் பழக்க ரீதியில் அடிமையாக்கக் கூடியதாகவும் காணப்படுகின்றன. இப்பழக்கம் தீவிரமடைந்த நிலையில் உயிரிழப்புக்கும் வழிகோலலாம் என்பதை அண்மைக் கால சம்பவங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

கம்பியூட்டர் விளையாட்டுக்களுக்கு அடிமையானதால் தென் கொரியாவில் பல மரணங்கள் நிகழ்ந்துள்ளன என 2005 ஆண்டின் BBC செய்திகள் தொவிக்கின்றன.

பொதுவாக, வன்முறை சார்ந்த வீடியோ விளையாட்டுக்கள் மாணவர்களின் கற்றலுக்குத் தடங்கலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவும் அவர்களின் புத்தாக்க முயற்சிக்கு இடையூறா கவும் அமைவதோடு, பின்வரும் அம்சங்களுக்கும் காரணமாக அமைகின்றன:

1) உடல் ரீதியான கிளர்ச்சி அதிகரிப்பு.
2) ஆக்கிரமிப்பு ரீதியான சிந்தனைகள் அதிகரிப்பு.
3) ஆக்கிரமிப்பு ரீதியான உணர்வுகள் அதிகரிப்பு.
4) ஆக்கிரமிப்பு ரீதியான நடத்தைகளின் அதிகரிப்பு.
5) சமூக முன்னேற்றத்துக்கு உதவி செய்யும் நடத்தைகள் குறைதல்.
6) குடும்ப உறவுகளில் விரிசல் ஏற்படுதல்.
7) சமூகத் தொடர்பு குறைவடைதல்.
8) எழுத, வாசிக்க, தர்க்க ரீதியில் சிந்திக்க இயலாமல் போதல்.

மிதமிஞ்சிய இணைய உபயோகம்

TV யின் பாதகமான விளைவுகள் பற்றி மேலே சொல்லப்பட்ட பெரும் பகுதி இண்டர் இணையப் பாவனைக்கும் பொருந்தும். அதிகமான மாணவர்கள் கம்பியூட்டரை நிதானத்தோடும், பொறுப்போடும் பயன்படுத்துவதற்குப் பதிலாக துஷ்பிரயோகம் செய்யக் கூடியவர்களாகவே காணப்படுகின்றனர். பல மணித்தியாலங்கள் அரட்டை அறைகளிலும் பயனற்ற வெப்தளங்களை அணுகுவதிலும் ஆபாச வீடியோக்களைப் பார்ப்பதிலும் செலவிடுகின்றனர். இவை கற்றலுக்கு மிகவும் இடையூறாக அமைகின்றன.



தொலைக்காட்சியைப் போன்றே மிதமிஞ்சிய இணையப் பாவனையும் மாணவர்களுக்கு மத்தியில் அக்கறையின்மையை வளர்ப்பதோடு அத்தியாவசிய வேலைகளுக்கும் இடையூறாக அமைகின்றது. இது தவிர, மோசமான கருத்துக்களும் பெருந்தொகையான விளம்பரங்களும் மாணவர்களைச் சென்றடைகின்றன.

தீர்வுகள்:

கம்பியூட்டர்கள் சக்தி மிக்க சாதனங்கள். அவை தேவைப்படும் பல தகவல்களையும் மேலும் பல பயன்களையும் பெற்றுத்தரக் கூடியவை. எனினும் அவற்றின் பாவனை வரையறுக்கப்பட வேண்டும். சில வெப்தளங்கள் தடுக்கப்பட வேண்டும். இன்று Student Patch என்ற ஒரு சேவையை டெலிகொம் நிறுவனம் வழங்குகிறது. அதில் மாணவர்களின் பிழையான பாவனையைத் தடுக்கும் வகையிலான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவற்றை மாணவர்கள் பயன்படுத்தலாம். தவிர, உங்கள் இணையப் பாவனையின்போது பெற்றார் உறவினர்களின் தலையீட்டை உள்வாங்கக் கூடியவர்களாகவும் மாணவர்கள் மாற வேண்டும். கம்பியூட்டரில் அளவு கடந்து நேரத்தைக் கழிக்கக் கூடாது. கம்பியூட்டரை எல்லோருக்கும் புலப்படக் கூடிய அடைக்கப்படாத இடத்தில் வைப்பதற்கு ஏற்பாடுகளையும் ஒத்துழைப்பையும் வழங்குவதோடு, பெரும்பாலும் முக்கிய தேவைகள் தவிர்ந்த நேரத்தில் கம்பியூட்டர் நிறுத்தி வைக்கப்பட வேண்டும்.

முகப்புத்தகம், கம்பியூட்டர்விளையாட்டுக்கள், அரட்டை அமர்வுகள் கூட நிறுத்தப்பட வேண்டும். இந்த வெப்தளங்களின் கெடுபிடிகள் காணப்படுமாயின் உங்களால் படிப்பதில் கவனம் செலுத்த முடியாமல் போய்விடும் என்பதை மனதிற் கொள்ளுங்கள்.

4. உங்களுடைய நண்பர்கள்

ஒருவருக்குப் பல வகையான நண்பர்கள் காணப்படலாம்.

சகாக்கள்

ஒன்றாக வேலை செய்ய வேண்டியவர்கள் அல்லது ஒரு தொழிற்பாட்டில் சேர்ந்து ஒத்தாசை வழங்க வேண்டியவர்கள்; அவர்கள் மீது விருப்பமில்லாத நிலையிலும் குறித்த வேலையைச் செய்வதற்காக நட்புறவோடு நடந்து கொள்ள வேண்டியிருக்கும்.

அறிமுகமானவர்கள்

இவர்களைப் பற்றி ஓரளவுக்குத் தெரியும். எனினும் அவர்கள் தொடர்பாக உள உணர்வுகள் இருக்காது.

சாதாரண நண்பர்கள்

அறிந்தவர்கள், விரும்புபவர்கள். பள்ளிக்கூடத்திலும் அயலிலும் எம்மோடு உறவாடுபவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கிய நண்பர்கள்

நன்கு அறிந்து வைத்திருப்பவர்கள். நாம் கரிசனை காட்டுபவர்கள். எமது அந்தரங்க விடயங்களை அவர்களிடம் கூறலாம். அவர்களை நம்பலாம்.

சிறந்த நண்பர்கள்

அவர்கள் மீதுள்ள உணர்வுகள், காதல் போன்று ஆழமானவை. அனைத்தையும் அவர்களோடு பகிர்ந்து கொள்ளலாம். எவ்வளவுதான் வாதிட்டாலும் தொடர்ந்தும் சிறந்த நண்பர்களாக இருக்கக் கூடியவர்கள்.

இவர்களுள் கற்பதற்கு துணை செய்கின்ற சிறந்த துணையாக யார் இல்லையோ அவர்கள் உங்களை நிச்சயமாக நீங்கள் படிப்பதிலிருந்தும் அவர்கள் உம்மைத் தூரப்படுத்தி விடுவர்கள். அவர்களின் இடையூறுகள் பல்வேறுபட்டதாக அமையலாம். உதாரணமாக:

1) வீண் விளையாட்டுக்களில் ஈடுபடுத்தலாம்.
2) கம்பியூட்டர் விளையாட்டுக்களுக்கு அழைத்துச் செல்லலாம்.
3) காதல் வலையில் சிக்க வைக்கலாம்.
4) உங்களுடைய படிப்பை இடைநிறுத்தும் திட்டமிட்ட செயற்பாடுகளில் இறங்கலாம்.
5) சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுத்தலாம்.

இவ்வாறு இதன் பட்டியல் நீண்டு செல்கின்றது.

தீர்வுகள்

நீங்கள் தனிமையாகவோ அல்லது நீங்கள் படிப்பதற்கு ஒருபோதும் தடங்கலாக அமையாத நண்பர்களுடன் இணைந்து படியுங்கள். உங்களுடைய நண்பர்கள் உங்களில் உண்மையான அக்கறையுடையவர்களாக இருந்தால் அவர்கள் நிச்சயம் நீங்கள் படிக்க வேண்டும் என்ற தேவையை உணர்ந்து அர்ப்பணத்துடன் செயற்படுவார்கள்.

யதார்த்தமான நண்பர்கள் நீங்கள் படிப்பதற்கு வழியமைத்துத் தருவார்கள். அவ்வாறு உங்களுக்கு களம் அமைத்துத் தரவில்லை எனில், உங்களுடைய கற்றல் இலக்குகளுக்குத் துணை நிற்கவில்லை எனில், நீங்கள் உங்கள் எதிர்கால முன்னேற்றத்துக்கான களத்தைச் சமைத்துக் கொள்ளத் தவறி விடாதீர்கள். அதற்கான ஒரே வழி கெட்ட நண்பர்களை விட்டொதுக்குவதே.

5. உங்களுடைய குடும்பம்

சில சந்தர்ப்பங்களில் குடும்ப உறுப்பினர்களும் படிப்பதற்கு இடையூறாக அமைவதுமுண்டு. வீட்டில் படிக்கின்ற பிள்ளைகள் இருக்கின்றார்கள் என்று தெரிந்து கொண்டு தொலைக்காட்சியில் சினிமாப் படங்கள், சின்னத் திரை நாடகங்களைச் சத்தமாகப் போட்டுக் கொண்டு பார்த்தல், சத்தத்தை உயர்த்தி கதைத்துக் கொண்டிருத்தல், உயர்ந்த சத்தத்தில் பாடல்களைச் செவிமடுத்தல் போன்ற விடயங்களில் குடும்ப உறுப்பினர்கள் ஈடுபடுவதுமுண்டு. தவிர சமையல், வீட்டு வேலை, கடைக்கு அனுப்புதல் போன்ற வேறு வேலைகளுக்கும் அடிக்கடி பயன்படுத்தல் போன்ற விடயங்களுக்கும் பிள்ளைகளைப் பயன்படுத்தும் வீடுகளும் காணப்படுகின்றன.

கம்பியூட்டரில் அளவு கடந்து நேரத்தைக் கழிக்கக் கூடாது. கம்பியூட்டரை எல்லோருக்கும் புலப்படக் கூடிய அடைக்கப்படாத இடத்தில் வைப்பதற்கு ஏற்பாடுகளையும் ஒத்துழைப்பையும் வழங்குவதோடு, பெரும்பாலும் முக்கிய தேவைகள் தவிர்ந்த நேரத்தில் கம்பியூட்டர் நிறுத்தி வைக்கப்பட வேண்டும்.

எனவே, நீங்கள் உங்களது குடும்ப உறுப்பினர்கள் சூழவுள்ள ஒரு வீட்டிலிருந்து படிக்கின்றீர்கள் என்றால் சில வேளை நீங்கள் எதிர்பார்க்கும் படிப்பதற்கான அமைதியான சூழலைக் கண்டு கொள்வது கடினமாக மாறிவிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வுகள்

படிப்பதற்கு முற்றிலும் அமைதியான ஓர் இடத்தை இனங்கண்டு கொள்ளுங்கள். வீட்டிலிருப்பவர்களிடம் தாங்கள் படிப்பதற்கு அவர்கள் எந்தவகையில் தடைகளாக அமைகின்றனர் என்பதை அவர்களுடன் கலந்துரையாடுங்கள். நீங்கள் படிப்பதற்குப் பொருத்தமான இடமொன்றை ஏற்படுத்தித் தருமாறு அவர்களிடம் வினவுங்கள். நிச்சயமாக நீங்கள் படிப்பதற்குப் பொருத்தமான சூழலைக் கண்டு கொள்வீர்கள்.

6. உங்களுடைய விளையாட்டுக்கள்

இன்றுள்ள கணிசமான மாணவர்கள் விளையாட்டுக்களில் ஆர்வம் கொண்டு அதில் அதிக அக்கறை செலுத்துவதனால் அவ்விளையாட்டுக்கள் கல்விக்கு ஊறுவிளைவிக்கக் கூடியதாக இருக்கின்றன. உண்மையில் ஒரு மாணவனின் விருப்பம் குறிப்பிட்ட ஒரு விளையாட்டுத் துறையில் பிரல்பயமடைய வேண்டும் என்றிருந்தால் அதில் ஈடுபாடு காட்டுவது தவறில்லை. ஆனால், அடிப்படையாக ஒரு மாணவன் கற்றுக் கொள்ள வேண்டிய கணிதம், மொழியறிவு மற்றும் சமூகம் சார் விடயங்களை உதாசீனம் செய்துவிட்டு விளையாட்டுத் துறையில் ஈடுபட இயலாது.

தேகாரோக்கியத்துக்காக ஒரு மாணவன் நாளொன்றுக்கு ஒரு மணித்தியாலம் அல்லது குறைந்தது அரை மணித்தியாலம் விளையாடுவது கட்டாயமாகும். குறிப்பிட்ட ஒரு விளையாட்டுத் துறையில் சாதிக்க விரும்பும் மாணவர் அதற்கான பயிற்சிகளில் ஈடுபடும் அதேவேளை, படிப்பிலும் அக்கறை செலுத்த வேண்டும். ஆனால் இங்கு கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் ஒன்றிருக்கிறது: தனக்கு கிரிக்கட் விளையாடுவதற்கு மிகவும் ஆசை என்பதற்காக எதிர்காலத்தில் அத்துறையில் ஒரு பிரபலமாக வருவதற்கான எவ்வித சாத்தியமும் அற்ற நிலையில் அத்தகைய விளையாட்டில் முழு நேரத்தையும் கழித்து வாழ்க்கையை அழிப்பதில் எவ்வித நியாயமுமில்லை.

முடிவாக

கைத்தொலைபேசி, தொலைக்காட்சிப் பெட்டி, கணனி, நண்பர்கள், குடும்பம், விளையாட்டுக்கள் எதுவாக இருந்தாலும் முற்று முழுதாக உதறித்தள்ளி புறக்கணிக்க வேண்டிய விடயங்கள் அல்ல. நாம் வாழ்க்கையில் முன்னேற இவை இன்றியமையாதவையாக சில நேரம் மாறிவிடுகின்றன. இருப்பினும், ஒரு தீர்க்கமான முடிவை (விதியை) மறக்காமல் ஞாபகத்தில் வைத்துக் கொள்வது அவசியமாகும். இவ்விதியை என்றும் மறக்காமல் பிரயோகிக்கும் காலம் எல்லாம் நீங்கள் அல்லாஹ்வின் உதவியுடன் வெற்றி பெறலாம் என நம்பிக்கை வைக்கிறேன்.

இதுதான் அந்த விதி

மேற்சொன்ன 6 விடயங்களிலும் நீங்கள் மேற்கொள்கின்ற உங்களுடைய பெறுமதியான நேரம், பணம், முயற்சி, தியாகம், அர்ப்பணிப்பு போன்ற முதலீடுகளுக்கு அவற்றிலிருந்து நீங்கள் பெறுகின்ற பிரதிபலன்கள் உங்களுடைய எதிர்கால வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு எந்தளவு பிரயோசனமாக இருக்கும் என்பதை பகுப்பாய்வு செய்து பார்க்கும் போது உங்களுடைய உள்ளம் திருப்தியடையுமானால் தொடர்ந்தும் அப்பாதையில் பயமின்றிப் பயணம் செய்யுங்கள். மாறாக உங்களுடைய கற்றல் முன்னேற்றத்துக்கும், உங்களுடைய செயற்பாடுகளுக்கும் எவ்வித் தொடர்பும் காணப்படவில்லையாயின் தயவு செய்து இத்தகைய தடங்கல்களை ஏற்படுத்தும் விடயங்களிலிருந்து விலகி நின்று உமது எதிர்காலத்தைச் செப்பனிட முயற்சி செய்யுங்கள்.

இம்முயற்சியில் பெற்றார், உறவினர்கள், ஆசிரியர்கள், உளவளத்துணையாளர்கள் மற்றும் சமூகத்திலுள்ள அனுபவசாலிகளின் உதவிகளைப் பெற மறந்துவிடாதீர்கள்.



உசாத்துணைகள் :

1. Altalib, H.Y., AbuSulayman, A.H.A., Atalib, O.H., (2014). Parent-Child Relations – A Guide to raising children. Dehiwela: AJ Printers
2. Roell.K, (2015) Top 5 External Study Distractions, What's Distracting You? Accessed 13th January 2015, available from http://testprep.about.com/od/Study_Skills/tp/Ex_Study_Dist.htm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிதம்

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

ஆசிரியர்: எம்.ஐ. அப்துல் ரஹீம் - மாவனல்லை

பகுதி A

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. 2kg கோதுமை மாவின் விலை ரூ. 140 எனின் 500g மாவின் விலை யாது?

2. சுருக்குக. (-11) + (-3)

3. $\sqrt{45} = \square .70$ எனின் பெட்டியில் வர வேண்டிய எண் யாது?

4. அடைப்புக்குறி நீக்கி சுருக்குக. 2 (a - 1) - a

5. O வை மையமாக கொண்ட வட்டத்தில் PQ விட்டமாகும். Δ PQR எவ்வகையான முக்கோணியாகும்?



6. $X^2 - 25$ என்பதன் ஒரு காரணி (X + 5) எனின் மற்றைய காரணி யாது?

7. சுருக்குக 7.43 + 0.743

8. ரூ. 100 பெறுமதியான பொருள் ஒன்றினை விற்பதன் மூலம் ரூ. 30 இலாபமாக கிடைத்தால் அவர் அடைந்த இலாபச் சதவீதம் யாது?

9. Sin 30^0 = 0.5000 எனின் Cos 60^0 இன் பெறுமானம் யாது?

10. n (A)' = 4, n (B)' இன் பெறுமானத்தை காண்க.



11. 3x - 4 < - 7 எனும் சமனிலையைத் தீர்த்து எண் கோட்டில் குறிக்க.



12. தீர்க்க. 4k - 3 = 17

13. உருவில் AC = BC = CD எனின் x, a இன் பெறுமானங்களைக் காண்க.

14. சுருக்குக.

$$\begin{array}{r} 1011_{\text{இரண்டு}} \\ -101_{\text{இரண்டு}} \\ \hline \hline \end{array}$$

15. குறித்த நிறுவனம் ஒன்றின் வருட வருமானம் ரூ. 350 000 ஆகும். அந்நிறுவனம் 'BIT' வரியாக 16% இனை செலுத்தினால் வரியாக செலுத்திய தொகை யாது?

16. $V^2 - U^2 + 2as$ எனும் சூத்திரத்தில் U இனை எழுவாயாக மாற்றுக.

17. புள்ளி A யிலிருந்து B யின் திசைகோள் - 150^0



புள்ளி A யிலிருந்து C யின் திசைகோள் யாது?

18. சுருக்குக. $\frac{3}{4} - \frac{2}{3}$

19. $\Sigma fx = 1572$, $\Sigma f = 30$ மேலுள்ள தரவுகளைப் பயன்படுத்தி இடைப் பெறுமானத்தைக் காண்க.

20. காரணி காண்க. m (m + 6) - 8 (m + 6)

21. உருவில் நிழற்றப்பட்ட பகுதியின் சுற்றளவினை காண்க.



22. y = 3x -5 எனும் நேர்கோட்டின் படித்திறன், வெட்டுத்துண்டு என்பவற்றை காண்க.

23. $\lg_3 243 = x$ எனின் x இன் பெறுமானத்தைக் காண்க.

24. 7cm, 13cm, 19cm, 25cm, ... எனும் ஒழுங்கில் கம்பித் துண்டுகள் வெட்டப்படின் 9 வது துண்டின் நீளம் எத்தனை cm ஆகும்?

25. இணைகரத்திற்கும் சாய்சதுரத்திற்கும் இடையிலான இரு வித்தியாசங்களை தருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. $x = 2, y = -3$ எனின் $4 - 5xy^2$ இன் பெறுமானத்தை காண்க.

27. உருவில் உள்ள தரவுகளைப் பயன்படுத்தி a இன் பெறுமானத்தை காண்க.



28. A : B = 4 : 3 ஆகவும் B : C = 2 : 5 ஆகவும் இருப்பின் A : B : C இதற்கிடையிலான விகிதத்தைக் காண்க.

29. உருவில் உள்ள PQ, AB என்பன இரு சம நீள மற்ற நாண்களாகும். இவ்வட்டத்தின் மையத்தினை காண்பதற்கான பருமட்டான படம் வரைக.



30. உருவில் BC = 12cm எனின் AB யின் நீளத்தைக் காண்க.

$$\left(Sin\ 30^0 = \tfrac{1}{2},\ Cos\ 30^0 = \frac{\sqrt{3}}{2}\ Tan\ 30^0 = \frac{1}{\sqrt{3}} \right)$$



பகுதி A

01. a)

i. சுருக்குக. $\left[\frac{4}{7} - \frac{3}{8}\right] \div \frac{11}{4}$

ii. ரூ. 450 பெறுமதியான பொருள் ஒன்றிற்கு ஒருவர் 15% இலாபம் வைத்து விலை குறிக்கிறார் எனின், பொருளின் குறித்த விலை யாது?

b) ரூ. 250,000 பெறுமதியான மோட்டார் வண்டி ஒன்றினை வெளிநாட்டிலிருந்து ஒருவர் இறக்குமதி செய்யும்போது 30% சுங்க வரியாக செலுத்தினார் எனின்,

i. சுங்க வரி யாது?

ii. வரி செலுத்திய பின் பொருளின் பெறுமதி எவ்வளவு?

02. a)

i. $(t^2 - 1), 2t\ (t + 1)$ என்பதன் பொ.ம.சி. யாது?

ii. அடைப்புக்குறி நீக்கி சுருக்குக. $2\ (k - 3) - (5 - k)$

b)

i. காரணி காண்க. $a^2 - 3a - 40$

ii. தீர்க்க. $3x + 4y = -10$
$x + 2y + 1 = 0$

03.



a) உருவில் உள்ள தரவுகளைப் பயன்படுத்தி a, x, b என்பவற்றின் பெறுமானங்களைக் காண்க.

b) இணைகரம் ABCD இல் DX = BY எனின்,



i. $\Delta ACX \equiv \Delta BCY$ எனவும்

ii. உரு DXYBD இன் பரப்பு ஆனது இணைகரம் ABCD இன் அரைவாசியாகும் எனவும் காட்டுக.

04.

a) ஒரு விளையாட்டுக் கழகத்தில் இருந்த அங்கத்தவர்கள் சிலரின் நிறைகள் பற்றிய தகவல் தண்டு, இலை வரைபில் தரப்பட்டுள்ளது.

தண்டு	இலை
4	0, 3
5	4, 6, 8
6	3, 4, 5, 5, 8
7	1, 1, 1, 7
8	0, 2, 9

i. வீச்சு யாது?

ii. அதிக மாணவர்கள் எந்த நிறையுடையவர்கள்?

iii. Q_3 இன் பெறுமானம் யாது?

iv. $Q_3 - Q_1$ இனை காண்க.

b) ஒரு தொகுதி மாணவர்கள் பெற்ற புள்ளிகள் தொடர்பான தகவல்கள் மீடிறன் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளிகள்	மாணவர்கள்
20-30	7
30-40	8
40-50	20
50-60	15
60-70	6
70-80	4

i. 60 புள்ளிகள் அல்லது அதனிலும் கூடுதலான புள்ளிகள் பெற்றவர்கள் முழுவதன் என்ன பின்னம்?

ii. 40 புள்ளிகளிலும் குறைவாக பெற்றோர் என்ன சதவீதம்?

iii. இப்பரம்பலுக்கான வலையுரு வரையத்தை வரைக.

05. கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்ட ஆசிரியர்கள் 60 பேரில் கையடக்க தொலைபேசி வைத்திருந்தவர்களின் எண்ணிக்கை பற்றிய தகவல் தரப்பட்டுள்ளது.

Hand Phone வைத்திருந்த ஆண் ஆசிரியர்கள் - 24 பேர்
Hand Phone வைத்திருந்து பெண் ஆசிரியர்கள் - 18 பேர்
Seminar இல் கலந்து கொண்ட பெண் ஆசிரியர்கள் - 31
Seminar இல் கலந்து கொண்ட ஆசிரியர்கள் - 60 பேர்



i. ஆண் ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

ii. தரவுகளை வென்னுருவில் குறிக்க.

iii. Mobile வைத்திராத பெண்களைக் குறிக்கும் பிரதேசத்தை நிழற்றுக.

iv. $n(H \cap L')$ இன் பெறுமானம் யாது?

v. Mobile வைத்திராத ஆண்கள் எத்தனை பேர்?

vi. $n(H' \cap L)$ எனும் பிரதேசத்தை வேறுவிதமாக தொடைக் குறிப்பீட்டில் தருக.

06.

i. AB = 9.0 cm நீளமான கோட்டுத் துண்டத்தை வரைக.

ii. BAC = 60^0 ஆகவும் AC = 5.0 cm ஆகவும் உள்ள புள்ளி C இனைக் குறிக்க.

iii. CD = 6.0 cm ஆகுமாறு AB யில் உள்ள ஒரு புள்ளி Dயினை குறிப்பதன் மூலம் Δ ADC யை பூர்த்தி செய்க.

iv. கோணம் CAB யை இரு கூறாக்குக. இது CD யை வெட்டும் புள்ளியை x எனக் குறிக்க.

v. X இல் இருந்து AB இற்கு செங்குத்து கோடு ஒன்றை வரைக.

vi. X ஐ மையமாகவும் AB, AC யை தொட்டுச் செல்வதுமான வட்டத்தை வரைக.

vii. அதன் ஆரையை அளந்து எழுதுக.

07.

a) உருவில் 24cm விட்டமும் 30 cm உயரமும் உடைய செவ்வுருளை வடிவான பாத்திரம் தரப்பட்டுள்ளது. (வட்டத்தின் பரப்பு $=\pi r$, உருளையின் கனவளவு $\pi r^2 h$, இங்கு $\pi = 3.14$)



i. மடக்கை அட்டவணையை பயன்படுத்தி அடியின் பரப்பளவை காண்க.

ii. பாத்திரத்தில் முற்றாக நீர் நிரப்பப்பட்டிருந்தால் நீரின் கனவளவு எத்தனை லீற்றர்?

b) கூட்டல் தொடரொன்றின் n ஆம் உறுப்பு Tn = 4n - 1

i. இத்தொடரின் முதல் மூன்று உறுப்புகளையும் எழுதுக.

ii. 9 ஆம் உறுப்பை காண்க.

iii. 67 என்பது இத்தொடரின் எத்தனையாம் உறுப்பு?

iv. முதல் 18 உறுப்புக்களின் கூட்டுத் தொகையை காண்க.

08. 1 - 6 வரை இலக்கமிடப்பட்ட ஒரே அளவான சிவப்பு நிற அட்டைகளிலிருந்து எழுமாறாக ஓர் அட்டையும் 1 - 4 வரை இலக்கமிடப்பட்ட பச்சை நிற அட்டைகளிலிருந்து ஓர் அட்டையையும் ஒருவர் எடுக்கின்றார்.

i. பெறப்படும் பேறுகளை தெக்காட்டின் தளத்தில் குறிக்க.

ii. சிவப்பு நிறத்தில் இரட்டை எண் எடுத்தல்.

iii. பச்சை நிறத்தில் மூன்றை எடுத்தல்.

iv. சிவப்பில் இரண்டை, பச்சையில் மூன்றை எடுத்தல்.

v. ஈட்டுக்களின் கூட்டுத் தொகை 7 இலும் கூடுதலாக இருப்பதற்கான நிகழ்தகவுகளை காண்க.

b) ஒருவரின் வருட வருமானத்தின் முதல் ரூ. 300,000 இற்கு வரி விலக்கு அளிக்கப்படுகின்றது. அடுத்த ரூ. 200,000 இற்கு 3% மேலதிகமான தொகைக்கு 12% வீதமும் வரியாக செலுத்த வேண்டியுள்ளது.

37ஆம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டில்லி சட்டப் பேரவை தேர்தல்

- 2015 பெப்ரவரியில் டில்லி சட்டப் பேரவை தேர்தல் நடைபெற்றது.
- இத்தேர்தலில் 70 தொகுதிகளில் 67 இடங்களை ஆம் ஆத்மி கட்சி பெற்றுள்ளதுடன் இக்கட்சியின் தலைவரான கெஜ்ரிவால் 31, 583 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.
- இதன் பிரகாரம் டில்லி முதல்வராக கெஜ்ரிவால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
- இத்தேர்தலில் பாரதீய ஜனதா கட்சி, காங்கிரஸ் கட்சி என்பன தோல்வியடைந்துள்ளன.

உலகின் ஏழ்மையான ஜனாதிபதி



- உலகின் ஏழ்மையான ஜனாதிபதி என உருகுவே ஜனாதிபதி ஜோஸ் முஜிகா வர்ணிக்கப்படுகின்றார்.
- 2015 மார்ச்சில் இவரது பதவி தவணைக் காலம் முடிவடைந்து பதவியில் இருந்து விலகினார்.
- இவரது ஆட்சியில்தான் மர்ஜுவானா போதைப் பொருட்களுக்கு சட்ட அனுமதி வழங்கிய முதலாவது நாடாக உருகுவே இடம்பெற்றது.



திரு. பீ. உமா சங்கர்,
B.Com (Jaf), M.Com (Kelaniya) (PDE) Spl.Trd.com, NDBF, Sri Lanka Technical College - Colombo

எம்.வி. லகூன்ஸ்

பயணிகள் கப்பல்

- இலங்கையினால் தயாரிக்கப்பட்ட எம்.வி. லகூன்ஸ் பயணிகள் கப்பலை இந்திய அரசாங்கத்திடம் பெற்றுக் கொடுக்கும் நிகழ்வு 2015 பெப்ரவரியில் கொழும்பில் நடைபெற்றது.
- 400 பேர் பயணிக்கக் கூடிய இப்பயணிகள் கப்பல் கொழும்பு டொக்கியாட் மூலம் நிர்மாணிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் முதல் பெண்கள்

- திருமதி அட்லின் மொலமுறே
  - அரசியல் 1 வது அரச பேரவை
- திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க
  - இலங்கையினதும் உலகினதும் 1 வது பெண் பிரதமர்
- திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க
  - இலங்கையின் 1 வது பெண் ஜனாதிபதி
- திருமதி மேனகா பெர்ணான்டோ
  - இலங்கையின் 1 வது பெண் விமானி
- திருமதி சரோஜினி குசலா வீரவர்த்தன
  - இலங்கையின் முதலாவது பெண் நீதிபதி
- திருமதி ஷிராணி பண்டாரநாயக்க
  - இலங்கையின் முதலாவது பெண் பிரதம நீதியரசர்
- சுசந்திகா ஜயசிங்க
  - விளையாட்டு வீராங்கனை

#MakeItHappen

உலக பெண்கள் தினம்

International Women's Day

- *1913 ஆம் ஆண்டு முதல் மார்ச் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினமாக உலகம் முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.*
- பெண்களுக்கு வாக்குரிமை அளித்த நாடுகளில் முதன்மை பெறுவது நியூஸிலாந்து ஆகும். 1893 ஆம் ஆண்டிலிருந்து பெண்கள் வாக்களித்து வருகின்றனர்.
- இதுவரை உலகில் 28 பெண்களே நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்தியுள்ளனர். சர்வதேச நாடாளுமன்றங்களில் இதுவரை 14.1 சதவீதத்திற்கு மேல் பெண்கள் இடம்பெற்றுள்ளனர்.
- இலங்கையில் பெண்கள் தொடர்பான துஷ்பிரயோகத்திற்கு 1938 எனும் நேரடி தொலைபேசி இலக்கம் பயன்படுத்தப்படுகின்றது.

19 வது திருத்தச் சட்டத்தின் நகல் வரைபு

- ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் நூறு நாள் வேலைத் திட்டத்தில் அரசியலமைப்பின் 19 வது திருத்தச் சட்டத்தை சமர்ப்பிக்கும் நோக்கில் 2015 பெப்ரவரியில் அதன் நகல் வரைபு வெளியிடப்பட்டுள்ளது.
- இதில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- ஜனாதிபதி பதவிக் காலம் 5 வருடங்கள்.
- பாராளுமன்ற பதவிக் காலம் 5 வருடங்கள்.
- அமைச்சர்கள் 30.
- பிரதியமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் 40.
- அரசியலமைப்பு பேரவை உறுப்பினர்கள் 5.
- அரச சபை உறுப்பினர்கள் 35.
- தேசிய திட்டமிடல் ஆணைக்குழு உறுப்பினர்கள் 5.
- தகவல் அறியும் உரிமை அடிப்படை உரிமையாகக் கருதப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்: நஸ்ரா நிசாம்தீன் BA (Hons) PGDE

தொடர்ச்சி... (தவணைப் பரீட்சை மாதிரி வினாப்பத்திரம் 2)

02. கீழ்வரும் பாடலின் பொருளை எழுதுக? தடித்த எழுத்திலுள்ள பகுதிக்கு சிறப்பு எழுதுக?

அ. கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே
மிக்காரைச் சேர்தல் மிகமான முன் இனிதே
எட்டுணை யானும் இரவாது தான் ஈதல்
எத்துணையும் ஆற்றல் இனிது

ஆ. பங்கப் பழனத் துழுமுழவார்
பலவின் கனியைப் பறித்த தென்று
சங்கிட் டெறியக் குரங்கிளநீர்
தனைக்கொண் டெறியுந் தமிழ் நாடா
கொங்கர்க்கமரா பதியளித்த
கொவே யிராச குலதிலகா
வெங்கட் பிறைக்கும் கரும்பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே

03. அறிவுடையார் உறவு பற்றி நீதி நூல்கள் யாது கூறுகின்றன?

04. ஆறுமுக நாவல் பற்றி 'நாவலர் எழுந்தார்' கட்டுரை முன்வைக்கும் விடயங்கள் யாவை?

05. படிக்காசுப் புலவரின் கவித்துவ ஆற்றலை மதிப்பிடுக?

06. குறவஞ்சி இலக்கியத்தில் மலைவளம் எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறது?

07. மீனவர் பாடலின் நாட்டார் இலக்கிய வெளிப்பாட்டை எடுத்துக் காட்டுக?

மாதிரி வினாப்பத்திரம் 3

01. சுருக்கமான விடை தருக.

1. 'கண்டே களித்தங் குறவாடித் தம்மிற் கலப்பர் கற்றோரே...' கொண்டு கூட்டி எழுதுக?
2. கம்பியூட்டர் - சிறுகதை ஆசிரியர் யார்?
3. 'புலங்களோடு கரணமும் ஆவியும் போந்து...' 'கரணம்' எனப்படுவது?
4. 'வெற்றி வேட்கை' எனும் நீதி நூல் உணர்த்தும் விடயம் யாது?
5. கொடிய பஞ்ச காலத்தில் ஏழைகளுக்கு அன்ன தானம் வழங்கிய வள்ளல் யார்?
6. 'வானரம்' எனப்படுவது யாது?
7. பாரதியார் எந்நூற்றாண்டுக்குரிய கவிஞர்?
8. 'கஞ்சினையுண்ணும் மறுசுவை போல்...' அறுசுவைகளும் எவை?
9. 'நாயனையார் கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும்...' கேண்மை எனப்படுவது?
10. நாட்டார் பாடல் என்றால் என்ன?

தொடரும்...

இதோ விடைகள்

தவணைப் பரீட்சை மாதிரி வினாப்பத்திரம் 01

01.

1. இந்தப் பெண்ணுடைய வேல் போன்ற கண்கள், பிரிந்தவர்களை வருத்துகின்ற கண்மையுடைய பாலச் சந்திரனுக்கும், கரும்புக்கு இறைவனாகிய மன்மதனுக்கும் மெலிவு அடைந்து நீரைச் சொரிந்து நிற்கும் பாவம் இவள் நிலை இரங்கத்தக்கது.
2. வெவ்வேறு காலச் சூழ்நிலையில் வெவ்வேறு புலவர்களால் பாடப்பட்ட பாடல்கள்.
3. சுயசரிதை எனும் பகுதியில்
4. படிக்காசுப் புலவர்
5. கதையம்சம், கதை நகரும் விதம்
6. மகளால் தாய்க்கு
7. மலை
8. குறப் பெண்ணை குறிப்பதாகும்.
9. ஆத்திசூடி, கொன்றை வேந்தன்
10. வயல் உழும்போது

02.

அ) பொருள்:

அறுசுவை போல் உப்பில்லாமல் காய்ச்சிய கஞ்சியினை உண்பவர்கள் துவைத்த அழுக்கற்ற உடையைப் போன்றவர்கள். ஒப்பான பனை யோலையால் பின்னிய பாயில் படுத்துறங்குப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர் வாழ்வார்கள். ஆகவே மனங்கொண்டது மாளி கையாகும்.

சிறப்பு

நாம் வாழ்கின்ற வாழ்க்கை மனதைப் பொறுத்தே அமைகிறது. மன நிறைவு மனித வாழ்வை சிறப் புறச் செய்யும் என்ற உண்மை இப்பாடல் வரியில் சிறப்பிக்கப்படுகிறது.

ஆ) பொருள்:

மழை அற்று விளைச்சல் சுருங்கிப் போனதால் நெல்லுக்குப் பஞ்சம் ஏற்பட்டது. அந்த பஞ்சத் தின்போது தராசிலே ஒரு தட்டில் பொன்னும் இன்னொரு தட்டில் நெல்லும் வைத்துச் சமப்ப டுத்தி விற்றனர். அவ்வாறு நெல்லின் மதிப்பு மிக வும் கூடியிருந்த காலத்தில் வீட்டிற்கு இரப்போர் வந்து கதவைத் தட்டியபோது இரப்பவரின் தட்டு நீட்டப்படும் முன்னரே அன்னம் கொடுப்பதற் காக தயாராக இருந்த மார்தட்டிய வள்ளல் சீதக் காதி.

சிறப்பு

சீதக்காதி வள்ளலின் கொடைத் தன்மை சிறப் பிக்கப்படுகிறது. வேகமாக, விரைவாக கொடை வழங்கும் திறன் காட்டப்படுகிறது. தருமம் வழங்க முன்நிற்பவராகவும் சிறப்பிக்கப்படுகிறது.

ஆசிரியர் வழிகாட்டல்

மாணவர்களே! 'அ, ஆ' இரண்டுக்குமான சிறப்பு எழுதும் முறையை கவனியுங்கள். அ - விளக்கத்தை உயிர்த்துணர்ந்து கருத்தை முன்வைப்பதன் மூலம் சிறப்பை எடுத்துக் காட்டுதல். ஆ - என்ன? எது? எவ்வாறு? என்ற வினாவுக்கு விடையளிப்பதனூடே சிறப்பு விளக் கப்பட்டுள்ளது.

03. நாலடியார் நட்பு பற்றி கூறியவை

நாலடியார் எனும் நீதி நூல் பல நீதிக் கருத்துக்களை மனித வாழ்வு செம்மையுற சிறப்பாக எடுத்துரைக் கிறது.

'யானை அனையவர்...' என்று தொடரும் நால டியார் பாடல் யாருடன் நட்புக் கொள்ள வேண் டும் என கூறுகிறது. நட்பு ஆழமானது; தன்னலம் மறந்தது; எதிர்பார்ப்பு அற்றது; துரோகம் செய் யாதது என்னும் பேருண்மையை நாலடியார், யானை, நாய் ஆகிய இரு மிருகங்களை எடுத்துக் காட்டி விளக்குவது பொருத்தமுடையதாக அமை கிறது.

‘‘யானையானது பல காலம் தனக்கு உணவளித்து, பாதுகாத்து, பராமரிக்கும் பாகனையே கொன்று விடும். ஆனால், நாய் தன்னை கோபித்தவன், தடியால் தண்டித்தவன் தன் எஜமான் என்ற போதும் வாலை ஆட்டி அன்பை வெளிப்படுத்தி நிற்கும்... என்னும் செய்தியை நாலடியார் முன் வைத்து நட்பு விழிப்புணர்வூட்டுகிறது.

அதாவது, யானை போன்றவர்களது நட்பை விட்டு, நாயைப் போன்றவர்களது நட்பை தொடர்வதே அனைவருக்கும் உகந்தது என நாலடியார் எடுத் துரைக்கிறது.

விடையுடன் அடுத்த இதழில் இன்ஷா அல்லாஹ் சந்திப்போம்.

அகரம் சஞ்சிகையை மாதாந்தம் தபாலில் பெற்றுக் கொள்ள விரும்புவோர்

"Aharam Subs" என Type செய்து

077 922 8282 என்ற இலக்கத்திற்கு

SMS செய்யவும்.

வருடாந்த சந்தா தொகை

ரூ. 800 (உள்நாடு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாப்

தாவர கலங்கள் விலங்குக் கலங்கள்

தரம் 10

- அங்கிகள் உடல் கலங்களால் ஆக்கப்பட்டுள்ளன. ரொபர்ட் ஹூக் என்பவரே முதன் முதலில் நுணுக்குக் காட்டியினூடாக கலத்தைக் கண்டறிந்து பெயரிட்டார்.
- கலங்கள் பற்றி ஆராய்ந்த ஷ்லெயிடன், சுவான், ருடொல்வ் வர்சோவ் ஆகியோர் பின்வரும் கலக் கொள்கைகளை முன்வைத்தனர்.
  1. அங்கிகளின் கட்டமைப்பினதும் தொழிற்பாட்டினதும் அடிப்படை அலகு கலம் ஆகும்.
  2. எல்லா அங்கிகளும் ஒன்று அல்லது பல கலங்களால் ஆனவையாகும்.
  3. முன்னர் காணப்பட்ட கலங்களிலிருந்தே புதிய கலங்கள் உருவாகின்றன.

01.

A) இரு வகையான கலங்களின் கோட்டு வரிப்படம் கீழே காட்டப்பட்டுள்ளது.



1. இவற்றில் தாவரக் கலத்தைக் குறிக்கும் உரு எது?
2. மேற்படி கலம் தாவரக் கலம் எனக் கருதப்படுவதற்குரிய காரணங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
3. கலப் பகுதிகள் P, Q, R, S இன் தொழில்கள் ஒவ்வொன்றைத் தருக.
4. கலங்களில் காணப்படும் மென்சவ்வினால் சூழப்படாத புன்னங்கம் எது? இதன் தொழிலைக் குறிப்பிடுக.

B) பின்வரும் தொழில்களை மேற்கொள்ளும் கலப் புன்னங்கங்களின் பெயர்களை அடைப்புகளிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

(இழுவிசையிரசனை, இழைமணி, நிறமூர்த்தம், கொல்கிச் சிக்கல், இரைபசோம்)

1. பிறப்புரிமைப் பதார்த்தங்களைக் களஞ்சியப்படுத்தலும் அவற்றை சந்ததி வழியே கடத்தலும்.
2. கலங்களினுள் நீர்ச் சமநிலையைப் பேணுதல், நிறப் பொருள்களைக் கொண்டிருத்தல்.
3. சுரப்புப் பதார்த்தங்களைத் தொகுத்தல், பொதி செய்தல், சுரத்தல்.
4. புரதத் தொகுப்பை மேற்கொள்ளுதல்.
5. காற்றுச் சுவாசச் செயன்முறை மூலமாக சக்தியைப் பிறப்பித்தல்.

விடைகள்

A)

1. உரு X
2. புன்வெற்றிடம் காணப்படுதல்.
   கலச்சுவர் இருத்தல்.
   பச்சையவுருமணி இருத்தல்.
3. P - ஒளித்தொகுப்பை மேற்கொள்ளுதல்.
   Q - கலத்தின் வடிவத்தைப் பேணுதல், தாங்குதல்.
   R - கலச்சுவாசம் மூலம் சக்தியைப் பிறப்பித்தல்.
   S - புரதங்களைக் கலத்தினுள் கடத்துதல்.
4. இரைபசோம் - புரதத் தொகுப்பை மேற்கொள்ளுதல்.

B)

1. நிறமூர்த்தம்　2. இழுவிசையிரசனை
3. கொல்கிச் சிக்கல்　4. இரைபசோம்
5. இழைமணி

கலப்பிரிவு

- கலப் பதார்த்தங்கள் பிரிவடைவதன் மூலம் புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்கள் உருவாக்கப்படும் செயன்முறை கலப் பிரிவு எனப்படும்.

- கலப்பிரிவில் முதலில் கருவிலுள்ள நிறமூர்த்தங் களின் பிரிவு இடம்பெறும். இதன் பின்னர் குழி யவுருவின் பிரிவு இடம்பெறும்.
- கலப்பிரிவு 2 வகைப்படும்.

1. இழையுருப் பிரிவு

- நிறமூர்த்தங்களின் எண்ணிக்கை மாறாத வகை யில் இடம்பெறும் கலப்பிரிவு இதுவாகும்.
- இதில் உருவாகும் மகட் கலத்தின் இயல்புகள் தாய்க் கலத்தின் இயல்புகளை ஒத்திருக்கும்.
- இதில் நிறமூர்த்தங்களில் மாறல்கள் தோன்றாது.
- இது இருமடிய, ஒருமடிய இரு வகைக் கலங் களிலும் நிகழும்.

2. ஒடுக்கற் பிரிவு

- நிறமூர்த்தங்களின் எண்ணிக்கை அரைவாசியாக் கப்படும் வகையில் நடைபெறும் கலப்பிரிவு ஒடுக்கற் பிரிவு எனப்படும்.
- இது இருமடியமான கலங்களில் நிகழும்.
- இவ்வகைக் கலப்பிரிவின் இறுதியில் 4 மகட் கலங்கள் தோன்றும்.
- உருவாகும் மகட்கலத்தின் இயல்புகள் தாய்க் கலத்திலிருந்து வேறுபட்டிருக்கும்.
- இதில் நிறமூர்த்தங்களில் மாற்றம் ஏற்படும் (மாறல் கள் தோன்றும்)

02. கலப்பிரிவு இரு முறைகளில் நிகழ்கின்றது.

1. இழையுருப் பிரிவின் முக்கியத்துவங்கள் இரண்டை எழுதுக?
2. இழையுருப் பிரிவின் ஒரு பாதகமான நிலை எது?
3. ஒடுக்கற் பிரிவு நிகழும் சந்தர்ப்பம் ஒன்றை எழு துக.
4. மேற்படி சந்தர்ப்பத்தில் ஒடுக்கற் பிரிவு நிகழ் வதால் பெறப்படும் நன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக.
5. மனித உடற் கலத்தில் காணப்படும் நிறமூர்த்தங் களின் எண்ணிக்கை யாது?

விடைகள்

1. உடல் வளர்ச்சி நடைபெற உதவும்.
   காயங்கள் குணமாதல், இறந்த கலங்களுக்கு பதிலாக புதிய கலங்கள் உருவாதல்.
2. புற்றுநோய் ஏற்படுதல்.
3. புணரிகள் (சூல், விந்துக்கலம்) உருவாகும்போது.
4. சந்ததி சந்ததியாக நிறமூர்த்த எண்ணிக்கை மாறாது பேணப்படும்.
   மாறல்கள் தோன்றுவதால் கூர்ப்பு நிகழ வழி வகுக்கும்.
5. 46 அல்லது 23 சோடி

தரம் 11 பௌதிகவியல் மின்னோட்டத்தின் விளைவுகள்

- வீட்டுப் பாவனைக்கு வழங்கப்படும் மின் ஆட லோட்டம் (AC) ஆகும்.
  இதன் அழுத்தம் வித்தியாசம் = 230 V,
  அதிர் வெண் = 50 Hz
- வீட்டு மின்சுற்றில் 3 வகையான மின்வடங்கள் காணப்படும்.
  1. உயிர்க்கம்பி (L) - சிவப்பு / கபிலம்
  2. நொதுமல் கம்பி (N) - நீலம் / கறுப்பு
  3. புவித் தொடுப்புக் கம்பி (E) - பச்சை

01. வீட்டு மின்சுற்றில் மின் வழங்கல் முதல் விளக்கு, குதைகள் வரை பல்வேறு துணைச் சாதனங்கள் உள்ளன.

i. மேற்படி துணைச் சாதனங்களை அவை காணப் படும் ஒழுங்கு முறையில் எழுதுக.

ii. பின்வரும் பயன்பாடுகளுக்காக காணப்படும் துணைக்கூறின் பெயரை எழுதுக.
   a) குறுஞ் சுற்றாக்கம் ஏற்படும்போது தன்னி யக்கமாகத் தொழிற்படல்
   b) தேவைப்படும்போது வீட்டு மின்னை முற் றாகத் துண்டித்தல்

iii. வீடொன்றில் 20w வலுவுடைய மின்குமிழ் ஒன்று தினமும் 10 மணித்தியாலங்கள் ஒளிரச் செய்யப் படுகின்றது. 30 நாட்களுடைய மாதம் ஒன்றிற்கு இதன் மூலம் செலவாகும் மின் அலகுகளைக் காண்க.

iv. வீட்டு மின்சுற்றில் மின்சாதனங்கள் தொடரா கவா, சமாந்தரமாகவா தொடுக்கப்பட்டிருக்கும்? இதற்கான காரணத்தையும் குறிப்பிடுக.

v. பின்வருவனவற்றில் பயன்படும் உலோகத்தை யும் அதன் சிறப்பியல்புகளையும் எழுதுக.
   a) உருகிகள் b) மின்வடங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vi. வீட்டு மின்சுற்றில் புவித் தொடுப்பு வடத்தின் பயன்பாடு யாது?

vii. புவித் தொடுப்பு வடத்தில் 7 / 0.67 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் கருத்து யாது?

viii. இழை மின்குமிழின் தங்குதன் மெல்லிய, சுருளுடைய இழையாக இருப்பதன் நன்மை யாது?

விடைகள்

i. சேவை உருகி, மின்மானி, பிரதான ஆளி, இடறு ஆளி, நுண்சுற்றுடைப்பான்

ii. a) இடறு ஆளி / தடக்கு ஆளி
b) பிரதான ஆளி

iii. மின் அலகுகள் = $\frac{20W \times 10 \times 30}{1000}$ = 6 அலகுகள்

iv. சமாந்தரமாக
எல்லா மின்சாதனங்களுக்கும் சமமான அழுத்த வித்தியாசமுடைய மின்னோட்டத்தை வழங்க.

v. a) ஈய வெள்ளீய கலப்புலோகம்
- தடைத்திறன் குறைவு
- உருகுநிலை குறைவு

b) செம்பு
- தடைத்திறன் குறைவு
- உருகுநிலை அதிகம்

vi. மின்கசிவு காரணமாக மின்சாதனங்களின் உலோகக் கவசத்திற்கு மின் பாயும்போது அதன் பெரும் பகுதி ஓட்டத்தை புவிக்கு கடத்துவதற்காக.

vii. வடத்தில் 7 சிறு கம்பிகள் உள்ளன.
1 சிறு கம்பியின் தடிப்பு 0.67 mm ஆகும்.

viii. கம்பியின் தடிப்பு குறைய அதன் தடை கூடும், கம்பியின் நீளத்தை அதிகரிக்க தடை கூடும். தடை கூடுவதால் மின்குமிழில் அதிக வெப்பம் ஏற்படும்.

05. உராய்வு விசை மனிதனுக்கு பயனுடையதாகவும் பாதிப்பானதாகவும் உள்ள விசை ஒன்றாகும்.

i. உராய்வு விசை அல்லது எல்லை உராய்வு விசை ஒன்றில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?

ii. பொருள் ஒன்றில் இயக்கத்தை ஆரம்பிக்க பிரயோகிக்க வேண்டிய விசை எந்த உராய்வு விசைக்குச் சமனாகும்?

iii. உராய்வு விசை பயன்படும் சந்தர்ப்பங்கள் மூன்றை எழுதுக.

iv. உராய்வைக் குறைக்கப் பின்பற்றப்படும் உபாயங்கள் 3 ஐக் குறிப்பிடுக.

v. தும்புக் கயிற்றின் முடிச்சைத் தளர்த்துவதை விட நைலோன் கயிற்றின் முடிச்சை இலகுவாகத் தளர்த்த முடியுமா? இதற்குரிய காரணத்தை விளக்குக.

விடைகள்

i. தொடு மேற்பரப்புகளின் இயல்பு.
செவ்வன் மறுதாக்கம்.

ii. எல்லை உராய்வு விசை.

iii.
1. தும்புக் கயிறு உராய்வின் காரணமாக பலமானதாக உள்ளது.
2. சைக்கிளில் தடுப்புகளின் தொழிற்பாட்டிற்கு உதவுகிறது.
3. மோட்டார் வாகன தடுப்பு செயற்பாட்டிற்கு உதவுகிறது.
4. டயர்களுக்கும் தரைக்குமிடையிலான உராய்வு காரணமாக வாகனத்தை நிறுத்த முடிகின்றது.

iv.
1. தொடு மேற்பரப்புக்களை ஒப்பமாக்குதல்.
2. மேற்பரப்புகளுக்கிடையில் எண்ணெய், கிறீசு இடுதல்.
3. மேற்பரப்புகளுக்கிடையில் உருளைப் போதிகை, குண்டுப் போதிகை இடுதல்.

v. தும்பு நார்களுக்கிடையில் தாக்கும் உராய்வு விசை நைலோன் நார்களுக்கிடையிலான உராய்வு விசையிலும் பார்க்க அதிகமாகும். இதனால் தும்புக் கயிற்றின் முடிச்சைத் தளர்த்துவது கடினமாக இருக்கும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கீழ்வருமாறு பகர்ந்தார்கள்.
"நீ எங்கிருந்த போதிலும் இறைவனை அஞ்சிக் கோள். ஒரு தீயகாரியத்தைச் செய்து விட்டால் அதைத் தொடர்ந்து ஒரு நல்ல காரியத்தைச் செய்துவிடு. அந்நல்ல காரியம் அத்தீய காரியத்தை அழித்துவிடும். மேலும், மக்களுடன் நற்பண்புகளுடன் பழகு." (திர்மதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸஈத் இப்னு ஜுபைருக்கும் ஹஜ்ஜாஜிற்குமிடையில்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த

ஓர் உரையாடல்



ஹஜ்ஜாஜ் : உமது பெயரென்ன?

ஸஈத் : ஸஈதிப்னு ஜுபைர் (வீரமானவரின் அதிர்ஷ்ட மகன்)

ஹஜ்ஜாஜ் : இல்லை, உமது பெயர் ஷகீ பின் குஸைர் (பலவீனமானவனின் துரதிஷ்ட மகன்)

ஸஈத் : உம்மை விட எனது தாய் எனது பெயர் பற்றி நன்கறிந்தவள்.

ஹஜ்ஜாஜ் : முஹம்மதைப் பற்றி உமது கருத்தென்ன?

ஸஈத் : அப்துல்லாஹ்வின் மகனான முஹம்மத் பற்றியா கேட்கிறீர்?

ஹஜ்ஜாஜ் : ஆம்

ஸஈத் : அவர் முழு மனித சமுதாயத்தினதும் தலைவர். அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபி. உயிருடனுள்ளவர்களிலும் கடந்து சென்றவர்களிலும் மிகச் சிறந்தவர். அல்லாஹ்வின் தூதைச் சுமந்தவர். தனக்கு ஒப்படைக்கப்பட்ட அமானிதத்தை சிறப்பாக நிறைவேற்றியவர். அல்லாஹ்விற்கும் அவனது வேதத்திற்கும், பொதுவாக முஸ்லிம்களுக்கும், குறிப்பாக அவர்களில் சிரேஷ்டமானவர்களுக்கும் விசுவாசமாக நடந்து கொண்டவர்.

ஹஜ்ஜாஜ் : அபூபக்ர் பற்றி உமது கருத்தென்ன?

ஸஈத் : அவர் உண்மையாளர். அல்லாஹ்வின் தூதரது பிரதிநிதி. சந்தோஷமாக வாழ்ந்துவிட்டு புகழுடன் மரணித்தவர். நபியவர்களின் வழிகாட்டலிலே எந்த விதமான மாற்றத்தையும் செய்யாது பின்பற்றியவர்.

ஹஜ்ஜாஜ் : உமரைப் பற்றிய உமது கருத்தென்ன?

ஸஈத் : அவரைக் கொண்டு அல்லாஹ் சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக் காட்டினான். அவர் அல்லாஹ்வினாலும், அவனது தூதரினாலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர். தனது முன்னைய இரு தோழர்களதும் வழியிலே சென்றவர். புகழுடன் வாழ்ந்து ஷஹீதாக மரணித்தவர்.

ஹஜ்ஜாஜ் : அவ்வாறாயின், உஸ்மான் பற்றி...?

ஸஈத் : தபூக் யுத்தத்திற்கான போராளிகளைத் தயார் செய்தவர். ரூமா என்ற கிணற்றை நூறு ஒட்டகைகளைக் கொடுத்து வாங்கி அதனைத் தோண்டி முஸ்லிம்களுக்காக ஸதகா செய்தவர். சுவனத்தில் தனக்கென்றொரு வீட்டை வாங்கிக் கொண்டவர். ரஸூலுல்லாஹ்வின் இரு புதல்வியரை மணந்ததனூடாக அவரது மருமகன் முறையானவர். வஹியின் கட்டளைப் படியே நபியவர்கள் அவருக்கு இத்திருமணத்தை செய்து வைத்தார்கள். அநியாயமாகக் கொல்லப்பட்டவர்.

ஹஜ்ஜாஜ் : அலியைப் பற்றி என்ன கூறுகிறீர்?

ஸஈத் : அவர் ரஸூலுல்லாஹ்வின் சிறிய தந்தையின் மகன். இளைஞர்களிலேயே முதலாவதாக இஸ்லாத்தை தழுவியவர். தூய்மை மிகுந்த பாத்திமாவின் கணவர். சுவனத்து இளைஞர்களது தலைவர்களான ஹஸன், ஹுஸைனின் தந்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹஜ்ஜாஜ் : உமையாப் பரம்பரையிலே வந்த கலீபாக்களில் உமக்குத் திருப்தியானவராக யாரைக் காண்கிறீர்?

ஸஈத் : அவர்களது படைப்பாளனுக்குத் திருப்தியானவரே என்னிடமும் திருப்தியானவர்.

ஹஜ்ஜாஜ் : அவர்களது படைப்பாளனுக்குத் திருப்தியானவராக நீர் யாரைக் காண்கிறீர்?

ஸஈத் : அவர்களது இரகசியங்களையும், உள்ளங்களையும் அறிந்தவனிடமே அது பற்றிய அறிவு இருக்கின்றது.

ஹஜ்ஜாஜ் : அப்படியாயின் என்னைப் பற்றி என்ன கூறுகிறீர்?

ஸஈத் : உங்களைப் பற்றி நீங்கள்தான் மிக அறிந்தவர்.

ஹஜ்ஜாஜ் : அவ்வாறல்ல, என்னைப் பற்றி நீர் அறிந்துள்ளதைத்தான் கேட்கிறேன்.

ஸஈத் : அவ்வாறாயின், அது உங்களைக் கவலையில் ஆழ்த்துமே தவிர, ஒருபோதுமே மகிழ்ச்சியைத் தராது.

ஹஜ்ஜாஜ் : கட்டாயமாக நான் உம்மிடம் என்னைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

ஸஈத் : நிச்சயமாக, நீங்கள் அல்லாஹ்வின் வேதத்திற்கு முரணானவர் என்பதை நான் நன்கறிவேன். புகழுக்காக நீங்கள் செய்யும் காரியங்களே உங்களை அழிவின்பால் இட்டுச் செல்கின்றன. உங்களை நரகிலே தள்ளியும் விடுகின்றன.

ஹஜ்ஜாஜ் : அல்லாஹ் மீது ஆணையாக! நான் உம்மைக் கொன்று விடுவேன்.

ஸஈத் : நீங்கள் அவ்வாறு செய்வதன் மூலம் எனது இவ்வுலக வாழ்வைத்தான் பாழ்படுத்துவீர்கள். ஆனால், நானோ உங்களது மறுமை வாழ்வையே பாழ்படுத்தி விடுவேன்.

ஹஜ்ஜாஜ் : நான் உம்மை எப்படிக் கொலை செய்ய வேண்டும் என்பதை நீரே தெரிவு செய்து கொள்ளும்.

ஸஈத் : ஹஜ்ஜாஜே! அதனை நீங்கள் தெரிவு செய்யுங்கள். அல்லாஹ் மீது ஆணையாக! நீங்கள் எந்த முறையைக் கையாண்டு என்னைக் கொலை செய்தாலும் அதே முறையைக் கொண்டு மறுமையில் அல்லாஹ் உங்களைக் கொலை செய்வான்.

ஹஜ்ஜாஜ் : உமக்கு மன்னிப்பளிக்க வேண்டுமென்று நீர் விரும்புகிறீரா?

ஸஈத் : மன்னிப்பென்று ஒன்றிருந்தால் அது அல்லாஹ்விடமிருந்து மாத்திரமே! உங்களிடமிருந்து எந்த மன்னிப்பையோ, சலுகையையோ நான் எதிர்பார்க்கவில்லை.

(அப்போது ஹஜ்ஜாஜ் கடும் கோபமடைந்து ''பணியாட்களே! வாளையும் கொலைக் கள விரிப்பையும் கொண்டு வாருங்கள்!'' என்று கட்டளையிட்டார். அப்போது ஸஈத் புன்முறுவல் பூத்ததைக் கண்ட ஹஜ்ஜாஜ், ''ஏன் சிரிக்கின்றீர்?'' என்று கேட்டார்.)

ஸஈத் : அல்லாஹ்வின் முன்னிலையில் உமது துணிச்சலையும் உம்மீதான அல்லாஹ்வின் சகிப்புத்தன்மையையும் கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன்.

ஹஜ்ஜாஜ் : பணியாட்களே! அவரைக் கொன்று விடுங்கள்!

ஸஈத் : (கிப்லாவை முன்நோக்கியவராக) ''வானங்களையும் பூமியையும் படைத்தவனை நோக்கி முழுமையாக கட்டுப்படுபவனாக நான் எனது முகத்தைத் திருப்பி விட்டேன்'' *(அல்அன்ஆம்: 79)*

ஹஜ்ஜாஜ் : அவரது முகத்தை கிப்லாவை விட்டும் திருப்பி விடுங்கள்.

ஸஈத் : நீங்கள் எங்கே நோக்கினாலும் அங்கே அல்லாஹ்வை கண்டு கொள்வீர்கள்.

ஹஜ்ஜாஜ் : அவரை பூமியிலே வீழ்த்துங்கள்

ஸஈத் : ''இதிலிருந்துதான் நாம் உங்களைப் படைத்தோம். மேலும், இதன்பாலே நாம் உங்களை மீளச் செய்வோம். மேலும், இன்னுமொரு முறை இதிலிருந்துதான் நாம் உங்களை வெளியேற்றுவோம்!'' *(தாஹா: 55)*

ஹஜ்ஜாஜ் : அல்லாஹ்வின் இந்த எதிரியை அறுத்து விடுங்கள். இவரை விட குர்ஆனிய வசனங்களைக் கொண்டு வாதிடக் கூடிய ஒரு மனிதரை நான் கண்டது கிடையாது!

ஸஈத் : (தனது இரு கரங்களையும் ஏந்தியவராக) யா அல்லாஹ், எனக்குப் பின்னால் எவர் மீதும் ஆதிக்கம் செலுத்தும் சக்தியை ஹஜ்ஜாஜுக்கு கொடுத்து விடாதே!

ஸஈத் கொல்லப்பட்டு 15 நாட்கள் கூட ஆகவில்லை ஹஜ்ஜாஜுக்கு ஓர் காய்ச்சல் பீடித்து மரணமானான்.

பஸ்லா பௌசுஸ்
5 ஆம் வருடம்
பாத்திமா ஸஹ்றா மகளிர் அ.க.
ஓட்டமாவடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் ஏன் தோற்றுப் போகிறார்கள்?

மாணவப் பருவத்தில் வெற்றி தோல்வி மாறி மாறி வருவதுண்டு. ஆனால் அவைதான் எமது எதிர்காலத்தையும் தீர்மானித்து விடுகின்றன. வெற்றி பெறும் மாணவர்கள் தமது இலக்கை அடைந்து கொள்கிறார்கள். அவ்வாறே தோல்வியுறும் மாணவர்கள் என்ன ஆவார்கள் என்ற ஒரு வினா இயல்பாகவே தோன்றி விடுகிறது. இவ்வாறு தோல்விக்கான காரணங்களை சற்று நோக்குவோம்.

இலக்கை தவறவிடுதல்

மாணவர்கள் இலக்கை வரையறுத்துக் கொள்வதில் சிரத்தை அற்றவர்களாக இருக்கிறார்கள். நான் எதற்காக பாடசாலையில் படிக்கிறேன் என்று விடை தெரியாத எத்தனையோ மாணவர்களை பார்க்கிறோம். தனக்கு பிடித்த துறையை தெரிவு செய்யாத, தனது திறமையை கண்டுபிடிக்காத மாணவர்களே இவ்வாறு இலக்கை தவற விடுபவர்கள்.

பெற்றோரின் வலுக்கட்டாயம்

சில பெற்றோர் தாங்கள் விரும்புகின்ற துறையில் தான் தனது பிள்ளை செல்ல வேண்டும் என நினைக்கின்றனர். அதனால் பிள்ளைக்கு வேறு துறையில் ஆரவம் இருக்கின்றபோது பெற்றோர் தெரிவு செய்யும் துறையை அப்பிள்ளையால் செவ்வனே ஆற்ற சக்தியற்றுப் போகிறது. அத்தோடு, கல்வியில் வெறுப்பு ஏற்படுவதுடன் பின்னடைவையும் சந்திக்கிறது.

மாணவர்களின் தாழ்வுச்சிக்கல்

எந்த மாணவனுக்கும் / பிள்ளைக்கும் ஒவ்வொரு திறமை காணப்படுகிறது. பாடசாலைப் பரீட்சையில் பெறுகின்ற புள்ளிகள் குறைவாக இருப்பதனாலும், வகுப்பில் பின்னிலைக்கு தள்ளப்படுவதானாலும் மாணவர்கள் என்னால் முடியாது, நான் அறிவில் குறைந்தவன் என்று தன்னை தாழ்த்திக் கொள்வதே இந்நிலைக்கு காரணம். கற்பது நிறையவே சம்பாதிப்பதற்காக என்ற மனோநிலை எம்மாணவர்களிடத்தில் நிலவுவதாலும், அறிவின் தரத்தை உணர்வதில் தவறவிடுவதாலும் உழைப்பதற்கு ஆண் மாணவர்கள் செல்வதோடு, திருமணத்தை நோக்கி பெண் மாணவிகளும் சென்று விடுகின்றனர்.

மாணவர்கள் வாழும் சூழல்

ஒரு மனிதனின் ஆளுமையில் தாக்கம் செலுத்துவதில் சூழற்காரணி முக்கியமானது. குடும்பச் சூழலைப் பொறுத்தவரையில் மாணவர்களது பெற்றோர் மாணவர் கல்வியில் காட்டுகின்ற அக்கறை மிகவும் முக்கியமானது. பெற்றோர் தனது பிள்ளையின் எதிர்காலத்தை பற்றி சிந்திக்க வேண்டும். விடுதிச் சூழலில் வாழுகின்ற மாணவர்கள் பல வகையான சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். சிலவேளைகளில் கல்விக்கு தடையாக கூட அவை அமைகின்றன. பாடசாலைச் சூழல், நண்பர்கள் என்பன இதில் பாரியளவில் பங்கு வகிக்கின்றன.

ஆசிரியர் - மாணவர் தொடர்பு

ஒரு மாணவன் வெற்றியடைவதற்கு தூணாக அமைபவர் ஆசிரியர். அந்தவகையில் மாணவர்கள் ஆசிரியரை விட்டும் தூரமாகின்றபோது அவர்களது வாழ்வில் ஒரு பகுதி இருளாகவே அமைந்துவிடும். எந்த அறிஞனாக இருந்தாலும் அவனின் வெற்றிக்கு பின்னால் ஓர் ஆசிரியர் இருக்கிறார். ஆசிரியரை புறக்கணிக்கும் மாணவ சமூகம் என்றும் வீழ்ச்சியை நோக்கியே செல்லும்.

தீர்வாக...!

இவ்வாறு சில காரணிகள் ஒரு மாணவனது தோல்விக்கு காரணமாக அமைந்தாலும் இலக்கை வறையறுத்துக் கொண்ட சிறந்த பெற்றோரின் வழிகாட்டல் கிடைக்கின்ற, தன்னம்பிக்கையுள்ள, சிறந்த சூழலை தனக்காக அமைக்கின்ற சிறந்த ஆசிரியரை வழிகாட்டியாக கொண்ட மாணவனின் வாழ்க்கை வெற்றியை நோக்கி செல்லும் என்பது மறுக்க முடியாத நியதியாகும்.

''எந்த ஒரு சமூகம் தன்னை தானே மாற்றிக் கொள்ளாத வரை அல்லாஹ் அந்த சமூகத்தை மாற்ற மாட்டான்''

(அல்குர்ஆன்)

ஜிப்ரான் ஜவாத்
ஜாமிஆ நளீமிய்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்னா நவாஸ்
ஜாமிஆ ஆஇஷா சித்தீக்கா

உன்னாலும் முடியும் முன்னேறு

வாழ்க்கையை அறிந்து, விளங்கி, விரும்பி, இரசித்து வாழத் தெரியாதவர்களாய் எம்மில் சிலர் இருப்போமேயானால் அவர்கள் எதிர்பார்ப்பது போன்று அவர்களுக்கு வாழ்க்கை சுவையாக அமையாது. இவ்வாறு ஒரு பக்க உலக நிலையிருக்க சிறப்பாக வாழ்வது எவ்வாறு? என்று எம்மில் பலர் சிந்திக்கக் கூடும். உண்மையிலேயே வாழ்க்கையை பலரும் பலவாறு நோக்கலாம். அதனால்தான் அந்த ஐந்தெழுத்துச் சொல்லுக்கு ஒரு தனியான வரைவிலக்கணம் கிடையாது. ஆனாலும் சத்திய மார்க்கமான இஸ்லாம் வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டுமென ஓர் அழகிய முறையைக் காட்டித் தந்துள்ளது. மேலும், அனைவருடைய வாழ்க்கையும் நிச்சயமாக ஒரே தன்மை கொண்டதாக இருக்காது. அதேபோல் அனைவரும் தத்தமது வாழ்க்கையை மையமாக வைத்து பல வரைவிலக்கணங்களைத் தெரிவிப்பதால் பெரும்பாலும் அவற்றுக்கிடையே ஒற்றுமை, சமதன்மை காணப்படுவதில்லை.

இப்படிப்பட்ட பரந்த பரப்பான விலை மதிக்கப்படாத வாழ்க்கையில் நாம் ஒருபோதும் எம்மை தாழ்ந்தவர்களாக, இயலாமையுள்ளவர்களாக எண்ணவே கூடாது. தன்னம்பிக்கை என்ற எம்மை வழி நடத்தும் சாதனத்தை நாமாக இயக்காதவரை அதுவும் இயங்காது; விளைவைத் தராது. விளைவில்லாமல் எம் ஆளுமை எம்மோடு இணையாது. ஆளுமையின்றி வாழ்வின் வர்ணங்களை எம்மால் அறிய முடியாது. வர்ணம் அறியாத வாழ்வைக் கொண்டு எவ்வாறு நிறம் தீட்டி அழகு பார்க்க முடியும்?

என்னால் முடியும், நான் செய்வேன் என்றே எம் எண்ணம் என்றும் இருக்க வேண்டும். எந்த வேலையும் எனக்கு சிரமம் என்று நினைக்கவே கூடாது. அருளாளன் அல்லாஹ் தன் அருள்மறையில்;

''அல்லாஹுத்தஆலா எந்தவோர் ஆத்மாவையும் அதன் சக்தியை மீறி பொறுப்பு சுமத்துவதில்லை.''

என்று கூறியது இப்படிப்பட்ட எண்ணம் தோன்றக் கூடாது என்பதற்காகவேயாகும். தன்னம்பிக்கையே எமது சகல செயல்களினதும் அடித்தளமாக இருக்க வேண்டும். முதலில் எம்மை நாமே நம்ப வேண்டும். நாம் எந்த விடயத்தை செய்வதாக இருந்தாலும் முதலில் தூய எண்ணத்தோடு முடியும் என்ற திட்டத்தை எம் மூளைக்கு கொடுக்க வேண்டும். எமது மூளை எம் தேவையை நாம் சொல்கின்ற நேரத்தில் செய்கின்ற அளவுக்கு நாம் அதற்கு பயிற்சியளிக்க வேண்டும். உண்மையிலேயே நாம் எதைக் கொடுக்கின்றோமோ அதையே எமது மூளை உள்வாங்கும். எமது தேவைகளை, உணர்வுகளை, இலக்குகளை, நோக்கங்களை அல்லாஹ்வின் அருளால் நன்றாக விளங்கியிருக்கும் உறுப்பு, எம் மூளையாகும். ஆகவே, எமது இலக்கிற்காக முயற்சியை நாம் இயன்றளவு செய்துவிட்டு அதன் முடிவை வல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனிடம் ஒப்படைக்க வேண்டும். முடிவின் இரு நிலைகளையும் ஏற்க வேண்டிய ஒரு தன்மையும் வாழ்வின் வெற்றியாளனிடம் காணப்பட வேண்டும்.

எந்த வேலையை எப்போது, எப்படி செய்ய வேண்டும் என்பதை எமது ஆழ்மனதில் இலக்கை மரம்போல் வளர விட வேண்டும். ஏனென்றால் இலட்சியமற்ற மனிதன் காலால் நடப்பதற்கு பதிலாக தலையால் நடக்கிறான் என்று அறிஞர் எமெர்ஸன் கூறுகின்றார். மேலும், இன்ப துன்பம் இரண்டும் மரத்திற்கு பசளையிடுவது போல் எமது இலக்கிற்கு ஊக்குவிப்பாக இருக்க வேண்டும். மாறாக, அதை அடியோடு வெட்டுகின்ற கத்தியாக இருக்க கூடாது. எந்த ஓர் இலக்கும் வெற்றியில் முடிவதற்கு ஒரு திட்டமும், தூரநோக்கும் தேவை. அந்த வகையில் மாணவர்களாகிய நாம் Vision, Mission, Goal என்பவற்றை திட்டமிட்டுக் கொள்ள முடியும். சில வேளை அவற்றில் ஏதாவது சறுகல்கள், தடைகள் ஏற்படலாம். அவ்வேளை என்னால் முடியாது, நான் செய்ய மாட்டேன், எனக்கு தைரியமில்லை என்று புலம்புதல் கூடாது. மாறாக, அவற்றை எமது இலட்சியத்தின் ஆழமான படிக்கற்கள் என்று நாமே எமது மூளைக்கு உற்சாகம் கொடுக்க வேண்டும்.

அது மட்டுமன்றி, அல்லாஹ் எமக்களித்துள்ள அருள்களை எண்ணி மனங்குளிர்ந்து, அவனுக்கு நன்றி தெரிவித்து, எமது கவலைகள், சந்தோஷங்கள், தேவைகள் என்பவற்றை அவனிடம் உரிமையோடு முன்வைத்து எமது உள்ளத்தை எந்த நிலையிலும் கலங்காமல் இருக்க முயற்சிப்போம். நல்லவற்றை எண்ணும் வெற்றியாளர்களாக எமது இலக்குகளை இலகுவாக அடைவோம்.

---

25 ஆம் பக்கத் தொடர்... (கணிதம்)

i. ரூ. 480,000 இனை வருட வருமானமாக பெறும் ஒருவர் செலுத்த வேண்டிய வரி எவ்வளவு?

ii. ரூ. 700,000 வருமானமாக கொண்ட ஒருவர் செலுத்த வேண்டிய வரி எவ்வளவு?

09. சார்பு $y = x^2 - 5$ எனும் வரைபிற்கு பூரணமற்ற அட்டவணையை நிழற்றுக.

x	-3	-2	-1	0	1	2	3
y	-4	1	....	5	4	1	-4

a) i. x = -1 ஆகும் y இன் பெறுமானம் யாது?

ii. அட்டவணை வரைபை வரைக.

iii. சார்பு உயர்வானதா அல்லது இழிவானதா?

iv. சமச்சீர் அச்சின் சமன்பாட்டை எழுதுக.

b)

i. வளையி நேராகும் x இன் பெறுமான வீச்சை தருக.

ii. இவ்வரைபின் விம்பத்தின் திரும்பற் புள்ளியினைக் காண்க.

10.



a) உருவில் CDE ஒரு நேர்கோடாகும். $ADE = 38^0$ எனின்,

i. a, y, x இன் பெறுமானங்களை காண்க.

ii. இரு சமபக்க Δ ஒன்றின் பெயரினைத் தருக.

iii. கோணம் AFC இற்கு சமனாக கோணம் ஒன்றினை பெயரிடுக.

b) Take Away ஒன்றில் தினந்தோறும் விற்பனை செய்யப்படும் மென்பானங்களின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது.

i. அதிகமான நாட்கள் எந்த ஆயிடையில் பானங்கள் விற்பனை செய்யப்பட்டன.

ii. அந்தக் கடையில் ஒரு நாளில் விற்பனை செய்யப்பட்ட அதிக எண்ணிக்கையிலான பானங்கள் எத்தனை?

iii. ஒரு நாளில் விற்பனை செய்யப்பட்ட பானங்களின் எண்ணிக்கைகளின் இடைப் பெறுமானத்தை காண்க.

iv. ஒரு போத்தலின் விலை ரூ. 25 எனின், ஒரு மாத வருமானம் யாது?

பாணங்கள்	f
14-18	2
19-23	5
24-28	9
29-33	13
34-38	10
39-43	4
44-48	2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைச் சரம்

இரத்தத்தின் ரணங்களில்...

கண்ணாமூச்சி ஆட்டத்திற்காக
அடிக்கடி மோதிப் பார்க்கும் பாலைநிலம்...
ஆயிரம் ஷஹீதியரின் தாய் நிலம்...
பாலைப் பரப்பே ஈமானிய சோலைப் பரப்பால்
மணத்த பலஸ்தீனிய பாசறை...

விசுவாசத் தென்றல் கல்புகளை
நனைத்துக் கொண்டிருந்த அவ்விடியலில்...
உயிர்களே இல்லாத மயான
விடியலுக்காய் உறவுகளை உரசிப்பார்க்கும்
யூதனின் சதி பரிணாமம் பெற்றது...

மணல் வெளிகளைப் போலவே
முரடாகிப் போயிருந்த அவர்களின்
மனவெளிகளும் ஏகனின் ஆணைக்கடங்காது
மழலைகளின் இரத்தத்தை
சுவைத்துப் பார்க்க எண்ணின...

அன்பு எனும் மூன்றெழுத்தை
துப்பாக்கிச் சூட்டுக்குள் அடகு வைக்கும்
வரட்டு இதயங்கள்
இம்மையின் ஈடிலாச் சொத்தான
தாயையும் சுட்டுப் பொசுக்கும் ஆச்சரியம்...

விசாரணை இன்றி சிறையில் அடைத்த
நீதி கைநழுவிப்போன தீவிரவாதிகளின்
ஈரம் வற்றிய இதயங்கள்
என்று அறியும்
இந்த மண்ணின் இரத்தத்தின் ரணங்களை?

தஸ்கரை ஷப்னா நிஸ்தார்

உண்மை மித்திரனாக...

நண்பனே!
உனக்காய் உன் இறைவன்
உன்னுள் பல ஆற்றலை வைத்திருக்க
உலகமோ உன்னைப் பார்த்து
தம் கைதட்டி வாய்கிழியச் சிரித்ததற்கு
ஏன் தளர்ந்து போகின்றாய்?
உன்னை விட முன்னோர்தானே
நித்தம் பல முத்துக்களை
தம் வாழ்வில் சொந்தமாக்கிட
பட்டபாடு கிட்டியதோ
உன் வாழ்வினிலே

இறை சோதனை
இப்ராஹிமினை சூழ்ந்தது
ஏன் அவர் பாவியா?
இல்லை - இறைவன் தன்
நண்பனை தெரிவு செய்ய
வைத்த பரிசோதனையே அது

உன் கிழிந்த சட்டையை
பார்ப்பவர் பழிக்கலாம்
சந்தோஷப்படு
உன் இதயச் சட்டை
இன்னும் கிழியவில்லை
என்றெண்ணி

ஆயிரம் ஆயிரம் அள்ளித்தரும்
அந்த நண்பன் என் நண்பன்
என்கின்றார்களா?
உன் நண்பர்கள் - உன்னிடம்

ஒரு முறையேனும் இறைவனிடம்
எனக்காய் கையேந்தும் நீ
என் நண்பன் என்பேன்
ஒரு கோடி முறையேனும் - என்
நண்பர்களிடம் நாவினாலல்ல
உள்ளத்தால்
உனக்காய் நான் இருக்க
மௌனத்தை தேடி ஏன் அலைகின்றாய்
நண்பனே!

அஸீம் அல்ஹாருதீன்
கலேவெல
இர்பானியா வளாகம்

அன்புள்ள தாயே...

தாயே என்னை பத்து மாதம்
சிரமத்துடன் சுமந்தாய்
எனக்குப் பாருக்கு முகவரி
தந்த தாயே...

எனக்குப் பாசம் எனும்
அன்பை ஊட்டினாய்
என்ன கைமாறு செய்வேன்
நான் உனக்கு
என்மேல் அன்பு அதிகம் உனக்கு

இருகரம் ஏந்துகிறேன்
உனக்கு சுவனச்சோலை கிடைக்க
வேண்டும் என்று
உன்னோடு சேர்ந்து நானும்
வர தாயே நீ பிரார்த்திப்பாயாக!

ஹப்ஸா ஹாரூன்
க/ கம்பளை ஸாஹிரா க.
கம்பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 45 நிமிடம்
வினாப்பத்திரம் I

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

1. அதிகளவு கொழுப்பைக் கொண்ட உணவு எது?
i. கருவாடு ii. பால்
iii. மரவள்ளி iv. மீன்

2. ஆபரணங்கள் செய்யப் பயன்படுத்தும் உலோகம்?
i. அலுமினியம் ii. தங்கம்
iii. இரும்பு iv. பலகை

3. உப்பைப் போட்டு வைக்க பொருத்தமான பாத்திரம்?
i. அலுமினியப் பாத்திரம்
ii. பிளாஸ்டிக் பாத்திரம்
iii. பித்தளைப் பாத்திரம்

4. பக்கவேரில் உணவைச் சேமிக்கும் தாவரம் எது?
i. கரட் ii. லீக்ஸ்
iii. மரவள்ளி iv. பீட்றூட்

5. கரைவலையில் மீன் சேரும் மூலையை எவ்வாறு அழைப்பர்?
i. பறி ii. கூடை
iii. வலை iv. மடி

6. வாகனங்களுக்கான வருடாந்த அனுமதிப் பத்திரம் பெற வேண்டிய இடம்?
i. பிரதேச செயலகம்
ii. பொலிஸ் நிலையம்
iii. போக்குவரத்து சபை

7. பின்வருவனவற்றுள் தண்டில் காய்க்கும் கூட்டுப் பழம் எது?
i. மாம்பழம் ii. பலாப்பழம்
iii. முந்திரி iv. விளிம்பி

8. இயற்கையாகவே, தாமாகவே தாவர வேரிலிருந்து கன்றுகள் முளைக்கும் தாவரம் எது?
i. தேக்கு ii. பலா
iii. கொய்யா iv. வற்றாளை

9. இறக்கைகள் இல்லாத பூச்சிகள் யாவை?
i. உண்ணி, பேன்
ii. வண்ணாத்துப் பூச்சி, கரப்பான்
iii. இலையான், கரப்பான்

10. இரும்பு வேலை செய்வோர் (கொல்லன்) சூடான இரும்புப் பொருட்களை எடுப்பதற்கு பயன்படுத்தும் உபகரணம் எது?
i. தணல் இடுக்கு ii. சாவணம்
iii. சுத்தியல் iv. உளி

11. குமார் தனது ஒன்பதாவது பிறந்த நாளை 20.09.2006 இல் கொண்டாடினான். அவன் தனது மூன்றாவது பிறந்த நாளை எந்த ஆண்டில் கொண்டாடி இருப்பான்?
i. 20.09.1999 ii. 20.09.2000
iii. 20.09.2001

12. தரப்பட்டுள்ள எண் சட்டத்தில் நூறின் இடப் பெறுமானத்தைக் குறிக்கும் எண் யாது?



i. 4 ii. 3
iii. 1 iv. 2

13. 420 முதல் 430 வரை உள்ள எண்களில் இரட்டைகள் எத்தனை காணப்படுகின்றன?
i. 5 ii. 6 iii. 4 iv. 10

14. தரப்பட்ட உருக்களில் நிழற்றப்பட்ட பகுதியின் பின்னத்தை எழுதுக.



i. 4/9
ii. 2/9
iii. 5/9

15. பின்வரும் எண்கோலங்களில் வித்தியாசமான எண்கோலம் எது?

i.

16	20
28	24

ii.

37	41
49	45

iii.

52	56
66	60

16. சிங்கள தமிழ்ப் புத்தாண்டு காலம் நெருங்கி வருவதை முன்னறிவிக்கும் பிராணி எது?
i. காகம் ii. குயில்
iii. மைனா iv. மயில்

17.



இப்பாத்திரத்தில் உள்ள திரவத்தின் அளவு யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. எண்கோலத்தை அவதானித்து வெற்றிடத்திற்கு வரவேண்டிய எண்ணின் கீழ் கீறிடுக.

1. 6, 8, 24 2. 12, 2, 12 3. 7, 4, ...

i. *16* ii. *12* iii. *14*

அடுத்து வரும் எண்ணை எழுதுக.

19. *9060, 9070, 9080, 9090, ...*

20. *1906, 1907, 1908, 1909, ...*

21. பெரிய வெள்ளி திருநாளைக் கொண்டாடுபவர்கள் யார்?

i. தமிழர்கள் ii. கிறிஸ்தவர்கள்
iii. முஸ்லிம்கள் iv. பௌத்தர்கள்

22. இரத்தினபுரி மாவட்டத்தில் அதிகமாக நிகழும் இயற்கை அனர்த்தம் எது?

i. மண்சரிவு ii. வறட்சி
iii. சுனாமி iv. சூறாவளி

23. இயற்கையாக ஏற்படக்கூடிய அனர்த்தங்களில் ஒன்று அல்லாதது?

i. வெள்ளம் ii. மண்சரிவு
iii. மின்னல் தாக்கம் iv. மின்தாக்கம்

24. வரலாற்றுப் புகழ்மிக்க இடங்களில் ஒன்று?

i. கொழும்பு ii. புத்தளம்
iii. மிகிந்தலை iv. கட்டுநாயக்கா

25. பிரசித்தி பெற்ற மடு தேவாலயம் அமைந்துள்ள இடம் எது?

i. மன்னார் ii. கண்டி
iii. யாழ்ப்பாணம் iv. காலி

பின்வரும் வாக்கியத்தை அவதானித்து அதற்குப் பொருத்தமான இன்னொரு வாக்கியத்தை தெரிந்து கோடிடுக.

26. கமலாவதியும் அவளது கணவரும் தனது மகளின் கணவரை சந்திக்க கொழும்புக்குச் சென்றனர்.

i. தனது மருமகனை சந்திக்கச் சென்றனர்.
ii. தனது மாமாவை சந்திக்கச் சென்றனர்.
iii. தமது பேரனை சந்திக்கச் சென்றனர்.

27. சர்வதேச சிறுவர் தினம் தேசிய மட்டத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

i. தேசிய கொடி ஏற்றப்பட்டு கொண்டாடப்பட்டது.
ii. நாடுபூராகவும் கொண்டாடப்பட்டது.
iii. கிராமங்களில் மட்டும் கொண்டாடப்பட்டது.

பிழையான கருத்தைத் தரும் படத்திற்கு கோடிடுக.

28.



i. ii. iii.

29.



i. ii. iii.

30.



i. ii. iii.

பட்டாம்பூச்சி பறக்குது பார்
பட்டு மேனி கொண்டது பார்
பாட்டுப் பாடி மகிழுது பார்
பம்பரம் போல் சுற்றுது பார்

31. பாடலில் இடம்பெற்ற அஃறிணை பெயர்ச் சொல்?

i. பறக்குது ii. சுற்றுது பார்
iii. பூச்சி

32. உடல் என்பதற்கு பாடலில் இடம்பெற்ற சொல்?

i. பார் ii. மேனி
iii. பம்பரம்

33. பம்பரம் போல் சுற்றுவது?

i. பார் ii. பட்டாம்பூச்சி
iii. பட்டுமேனி

34. பட்டுமேனி கொண்டது பார் என்பதில் இடம் பெற்ற அடைமொழிச் சொல் எது?

i. பட்டு ii. மேனி
iii. பார்

35. பட்டாம் பூச்சி என்பது?

i. பட்டுப்பூச்சி ii. மின்மினிப்பூச்சி
iii. வண்ணத்துப்பூச்சி

பின்வரும் சொற்களுக்கான கூட்டத்தைக் குறிக்கும் சொற்களுக்கு கோடிடுக.

36. யானை (கட்டு, பந்தி, பிடி)

37. ஆ (நிரை, பந்தி, கூட்டம்)

38. படை (வீரன், அணி, கணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கமைக்குக.

39. டு - க - ண் - ற் - க =

40. ண் - ம - ல் - ண - யி - வ =

பின்வரும் பந்தியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

மதுஷான் ஓர் அநாதை. கற்கும் காலத்தில் மிகத் திறமை காட்டினாலும் கணித பாடத்தில் இருபது புள்ளிகளுக்கு மேலே எடுக்க மாட்டான். இதனால் ஆசிரியரும் அவனுக்கு புத்திமதிகளைக் கூறுவார். அவன் வாலிபனானதும் கண்டவாறு நண்பர்களுடன் சுற்றித்திரிவதும் வீண் செலவுகளைச் செய்வதிலுமே காலத்தைக் கடத்தினான்.

41. அநாதை என்பது?

i. இடம்பெயர்ந்தவன் ii. துட்டன்
iii. பெற்றோரை இழந்தவன்

42. கணித பாடத்தில் பொடுபோக்குத்தனமாக இருந்தவனுக்கு ஆசிரியர் கூறிய பழமொழி எது?

i. கண்டது கற்கப் பண்டிதன்
ii. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
iii. தன்வினை தன்னைச் சுடும்

43. வீண்செலவு செய்பவனை குறிக்கும் சொல்?

i. ஊதாரி ii. வழிப்போக்கன்
iii. உலோபி

44. வாலிபன் என்பதன் எதிர்பாற் கருத்து

i. வாலை ii. வாலிபி
iii. வாலிபை

45. நண்பன் என்பதற்கான எதிர்க்கருத்து?

i. தோழன் ii. பாங்கன்
iii. பகைவன்

46. 'க' வரிசையில் சரியாக ஒழுங்கமைந்த சொற்கூட்டம் எது?

i. குதிரை, கொக்கு, கௌவி, கதிரை
ii. கூடை, கெட்டவன், கிண்ணம், காது
iii. காப்பு, கீரை, கூழ், கோழை

47. பொற்குடம் என்பதனை பிரித்தெழுதினால்?

i. பொன்+குடம் ii. பொண்+குடம்
iii. பொட்குடம்

48. சரியாக எழுதப்பட்ட சொல் எது?

i. முண்நூறு ii. பன்னிரண்டு
iii. முற்பது

49. ஆயுத எழுத்து?

i. 12 ii. 1 iii. 30

50. முக்கனிக்குள் அடங்குவது?

i. மா, பலா, அன்னாசி
ii. பலா, விளா, மா
iii. மா, பலா, வாழை

51. திருக்குறளோடு சம்பந்தப்பட்டவர்?

i. ஔவையார் ii. திருவள்ளுவர்
iii. பாரதியார்

விடைகள்

1. ii
2. ii
3. ii
4. iii
5. iv
6. i
7. ii
8. i
9. i
10. i
11. ii
12. ii
13. ii
14. ii
15. iii
16. ii
17. 1200 ml
18. iii
19. 9100
20. 1910
21. ii
22. i
23. iii
24. iii
25. i
26. i
27. ii
28. i
29. ii
30. i
31. iii
32. ii
33. ii
34. i
35. iii
36. பந்தி
37. நிரை
38. அணி
39. கற்கண்டு
40. வண்ண மயில்
41. iii
42. ii
43. i
44. i
45. iii
46. i
48. ii
49. ii
50. iii
51. ii

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

நேரம் 1 மணி 15 நிமிடம்

வினாப்பத்திரம் II

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

1. 7000 + 0 + 12 + 5 இந்த எண்களை சேர்த்து எழுதும்போது கிடைக்கும் எண்.
   i. 70125 ii. 7125
   iii. 7017 iv. 7025

2. பத்தாயிரத்து ஏழு என்பதை எண் குறியில் எழுதும் விதம்.
   i. 1017 ii. 1007
   iii. 10007 iv. 10070

3. 
   20 இன் குவியல்கள் ஐந்தின் எத்தனை பொருட்கள் உள்ளன?
   i. 5 ii. 4 iii. 10 iv. 20

4. அருகில் உள்ள உருவில் எத்தனை செங்கோணங்கள் உள்ளன.
   i. 6 ii. 8 iii. 10 iv. 4

பின்வரும் எண்கோலத்தில் அடுத்து வரும் எண்ணின் கீழ் கீறிடுக.

5. 1, 2, 4, 8, ...
   i. 10 ii. 12 iii. 16

6. 9, 14, 19, 24, ...
   i. 29 ii. 30 iii. 28

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

7. இலங்கையின் தென் மாகாணத்தில் போர்த்துக்கீசரால் கட்டப்பட்ட கோட்டையின் பெயர் என்ன?
   i. கொழும்பு கோட்டை
   ii. திருகோணமலை கோட்டை
   iii. காலி கோட்டை

8. புத்தபெருமானின் புனித தந்தம் கொண்ட பேழை எங்குள்ளது?
   i. தலதாமாளிகை
   ii. சிகிரியா மலைக் குன்று
   iii. சிவனொளிபாத மலை

9. பின்வருவனவற்றுள் தகவல் தொடர்பு சாதனம் அல்லாதது எது?



   i. ii. iii. iv.

10. செப்புக் கம்பியொன்றை வெட்டுவதற்கு மிகப் பொருத்தமான உபகரணம் யாது?



   i. ii. iii. iv.



நான்கு நகரங்களுக்கு இடையிலான தூரத்தை காட்டும் வரிப்படம் அருகில் தரப்பட்டுள்ளது.

11. எந்த நகரத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்தால் குறைந்தளவு தூரத்தில் எல்லா நகருக்கும் செல்ல முடியும்?

12. A என்ற நகரிலிருந்து எல்லா நகருக்கும் செல்லக் கூடிய குறைந்த தூரம் எவ்வளவு?

13. 5 m நீளமுள்ள ஒரு நாடாவிலிருந்து ஒவ்வொன்றும் 75 cm நீளமுள்ள துண்டுகள் வெட்டப்பட்டன. நாடாவின் எஞ்சியுள்ள பகுதியின் நீளம் எவ்வளவு?

14. சிகிரியா ஓவியங்களிலுள்ள மாதர்கள் கையில் வைத்துள்ள மலரின் பெயர் யாது?
   i. தாமரை ii. ரோசா
   iii. நீரோற்பலம் iv. சூரியகாந்தி

15. இலங்கையின் கலாசார முக்கியத்துவமுடைய நகரங்கள்.
   i. கண்டி, கொழும்பு, காலி
   ii. பொலன்னறுவை, கண்டி, அனுராதபுரம்
   iii. சிகிரியா, காலி, நுவரெலியா

16. இலங்கையை ஆண்ட கடைசி மன்னனின் பெயர்?
   i. காசியப்பன் ii. ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன்
   iii. சங்கிலி மன்னன்

17. நீர்வீழ்ச்சிகள், ஆறுகள் இல்லாத பிரதேசம் யாது?
   i. யாழ்ப்பாணம் ii. நுவரெலியா
   iii. பதுளை iv. கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. மத்திய மாகாணத்தில் அடங்கும் மாவட்டம் அல்லாதது?

i. கண்டி ii. நுவரெலியா

iii. மாத்தளை iv. பதுளை

19. சாடிகளின் அடியில் நீரை உறிஞ்ச இடப்படும் பொருள் எது?

i. செங்கல் துண்டுகள் ii. களிமண்

iii. பிளாஸ்டிக் துண்டுகள்

பின்வரும் உபகரணங்கள் ஒவ்வொன்றையும் பயன்படுத்தும் தொழிலாளியின் பெயரை எழுதுக.

20.

21.

22.

23. 

24. பின்வரும் எண் நிரையில் அடுத்து வரும் எண்ணை எழுதுக.

1, 0.75, 0.5, ...

25. 4 தோடம் பழங்களின் நிறை 1200g எனின் 7 தோடம் பழங்களின் நிறை?

26. பருப்பின் விலை 30 ரூபாவும் சீனியின் விலை 90 ரூபாவுமாகும். சீனியையும் பருப்பையும் வாங்க கொடுக்க வேண்டிய மொத்த பணம்?

பின்வரும் நிறைகளை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

3 kg	1250 g	2.5 kg	2000g	1500g

27. நிறைகளை இறங்குவரிசைப்படுத்தினால் நடுவில் வரும் நிறை யாது?

28. ஏறுவரிசைப்படுத்தினால் கடைசியாக வரும் நிறை யாது?

29. மிகக் கூடிய நிறைக்கும், மிகக் குறைந்த நிறைக்கும் உள்ள வித்தியாசம் யாது?

பின்வரும் வசனங்களை எதிர்ப்பால் வசனமாக மாற்றி எழுதுக.

30. பாலகன் கதறி அழுதான்.

31. மாணவி வகுப்பறையை சுத்தம் செய்தாள்.

அடைப்புக்குள் உள்ள வாக்கியங்களின் பொருத்தமான பெயர்களை புள்ளிக் கோட்டில் எழுதுக.

(ஏவல் வாக்கியம், வினா வாக்கியம், மேற்கோள் வாக்கியம், வினைமுற்று வாக்கியம், வியப்பு வாக்கியம்)

32. மாமா அந்த பட்டத்தை வாங்கித் தாருங்கள் என சிறுவன் அடம்பிடித்தான்.

33. ஆகா, எத்தனை அழகு.

34. ஓடி வா.

35. யார் இந்த மனிதன்.

36. நட்சத்திரங்கள் அழகாக மின்னின

பின்வரும் பாடலை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

வானம் பொழிய
மண் குளிர்ந்தது
மண் குளிர
பொன் விளைந்தது
பொன் விளைந்திட
இடுக்கண் களைந்தது

37. எது பொழிந்தது?

38. குளிர்ந்தது எது?

39. பொன் விளைந்தது எதனால்?

40. இடுக்கண் களைந்தது என்பதை இலகு தமிழில் எழுதுக.

41. இப்பாடலில் பொன் விளைந்தது என்பதனால் கருதப்படுவது?

i. மாலைகள் உருவாக்கப்பட்டன.

ii. உணவு, தானியங்கள் போன்றன விளைந்தன.

iii. தங்கம் கொட்டியது.

சுத்தம் பற்றிய இரு பழமொழிகளை எழுதுக.

42. ....

43. ....

சிங்கள வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.

44. கிரவா கொல பாட்டய்

45. தாத்தா யனவத?

ஆங்கிலச் சொற்களுக்கான கருத்தை எழுதுக.

46. HOSPITAL :

47. CHALK :

இடைவெளிக்குப் பொருத்தமான இணை மொழிகளை எழுதுக.

48. தாவூதும் சுலைமானும் ஏட்டிக்குப் .... (ஈட்டியாக, போட்டியாக) படித்தனர்.

49. நாம் கண்ணும் .... (கருத்துமாய், இமையுமாய்) கற்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழுள்ள வாக்கியங்களில் ஒரு பிராணி மறைந்துள்ளது. அதனை கண்டறிந்து எழுதுக.

50. மரத்தில் இருந்து விழுந்தவனை தந்தையும் உதைத்தார்.

51. அம்புலி மனதைக் கவர்ந்தது.

52. பின்வரும் பந்தி பிழையானது எனின் அதற்கான காரணம்?

புலி ஒன்று பசியால் அங்கும் இங்கும் அலைந்து திரிந்தது. அதற்கு புல்கட்டு ஒன்றைத் தவிர வேறெதுவும் உணவாகக் கிடைக்கவில்லை. எனவே, புல்லைச் சாப்பிட்டு தனது பசியைப் போக்கியது.

i. புலி அங்கும் இங்கும் அலைந்து திரியாது.

ii. புலி புல் உண்ணாது.

iii. புலிக்கு பசி ஏற்படாது.

53. பின்வரும் பந்திக்கு சரியான காரணமாக அமைவது?

சுமதி தூங்கும் பொழுது வீடே இருட்டாக இருந்தது. நள்ளிரவில் எழுந்து பார்த்தபோது அவளது வீடு வெளிச்சமாக காணப்பட்டது.

i. சூரியன் உதித்திருக்கும்.

ii. மின்சாரம் தடைப் பட்டிருக்கும்.

iii. மின்தடை நீங்கி இருக்கும்.

பின்வரும் பிராணிகளின் பெண் மரபுகளை எழுதுக.

54. கலையோடு .... யும் நீர் பருகியது.

55. நரி ....யை கடித்து துரத்தியது.

பின்வரும் சொற்களுக்கான பன்மைச் சொற்களை எழுதுக.

56. அது ....

57. அவன் ....

58. நான் ....

59. உன் ....

பரிசுப்போட்டி ஒன்றிலே நீர் வெற்றி பெற்று ஒரு சைக்கிளை வென்றெடுக்கின்றீர். அந்த சைக்கிள் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது ஐந்து சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம்.

விடைகள்

1. iii
2. iii
3. ii
4. ii
5. iii
6. i
7. iii
8. i
9. iv
10. ii
11. B
12. 250 m
13. 1250 cm
14. iii
15. ii
16. ii
17. i
18. iv
19. i
20. தச்சன்
21. கமக்காரன்
22. மின் இணைப்பான்
23. மேசன்
24. 0.25
25. 2100 g
26. ரூபா 300
27. 2000 g
28. 3 kg
29. 1 kg, (1000g)
30. பாலகி கதறி அழுதாள்
31. மாணவன் வகுப்பறையை சுத்தம் செய்தான்
32. மேற்கோள் வாக்கியம்
33. வியப்பு வாக்கியம்
34. ஏவல்
35. வினா
36. வினைமுற்று
37. வாமை
38. மண்
39. மண் குளிர்ந்ததால்
40. துன்பம் தீர்ந்தது
41. ii
42. சிரக்கப் போனாலும் சிறக்கப் போ
43. கந்தையானாலும் கசக்கிக் கட்டு
44. கிளி பச்சை நிறம்
45. அப்பா போவாரா
46. வைத்தியசாலை
47. வெண்கட்டி
48. போட்டியாக
49. கருத்துமாய்
50. தவளை
51. புலி
52. ii
53. iii
54. பிணை
55. பாட்டி
56. அவை
57. அவர்கள்
58. நாம், நாங்கள்
59. உங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகை

அபூதர்தா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்:

எனது உள்ளத்திற்கு ஓய்வு தேவைப்படும்போது நான் சிரிப்பேன்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சில நேரங்களில் கடைவாய்ப்பல் தெரியும் அளவுக்குச் சிரிப்பார்கள்.

அளவோடு சிரிப்பது அறிஞர்களின் பண்பு

அதிகம் சிரிக்காதீர். அதிகம் சிரிப்பது உள்ளத்தை சாகடிக்கும். (இப்னு மாஜா)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் உங்கள் சகோதரனைப் பார்த்து புன்முறுவல் செய்வதும் ஸதகா (நற்செயல்) ஆகும்.

மலர்ந்த முகத்தோடு உன் சகோதரனைச் சந்திப்பது நன்மைக்குரியது. (ஸஹீஹ் முஸ்லிம்)

எப்போதும் மலர்ந்த முகத்துடன் இருப்பவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சியை அனுபவிப்பார்கள்.

புன்முறுவல், முகமலர்ச்சி, பரந்த உள்ளம், பெருந்தன்மை, இளகிய மனம், கருணை ஆகிய சிறந்த பண்புகள்தான் நமக்கு அதிகம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org